

டேக்பான் (ஆறு மாநில) ரெட்டி நலச்சங்கம்



நமக்கு நாம்!



நாடு நமது!

தோற்றம்: 14.04.1987

மார்ச் 2026

# ரெட்டி பண்பாடு

**REDDY PANPADU**

காலாண்டிதழ்

రెడ్డి పన్పాడు | ರೆಡ್ಡಿ ಪನ್ಪಾಡು | റെഡ്ഡി പൻപാട്



**கனவுகளைத் துரத்துங்கள்! திட்டமிடுங்கள்! உழையுங்கள்!**

# வெற்றி நிச்சயம்!

நேர்காணல்




கொரட்டூர், சென்னை

✆ 9382166995
DR. ASHOK KUMAR

## ரெட்டி பண்பாடு

**கௌரவ ஆசிரியர்**
திரு.K.நாராயணன் ரெட்டி, திருச்சி
94883 83053

**சிறப்பாசிரியர்**
திரு.M.V.வைத்திலிங்கம் ரெட்டியார்,
புதுச்சேரி
98431 33287

**ஆசிரியர்**
திரு.R.பட்டாபி ரெட்டியார், சென்னை
99417 25914

**இணை ஆசிரியர்கள்**
திரு.G.கிருபாகரன் ரெட்டியார், திண்டிவனம்
94433 55481
திரு.J.நேமிதாஸ் ரெட்டியார், சென்னை
94449 30369

**ஆலோசனை குழு**

**முதன்மை ஆலோசகர்:**
திரு.P.R.நரசிம்மன் ரெட்டியார்,
சென்னை
98840 20039

திரு.R.பட்டாபிராமன் ரெட்டியார்,
மதுரை
93441 59399

திரு.M.V.ராமதாஸ் ரெட்டியார்,
சென்னை
94444 13142

திரு.S.முத்துகிருஷ்ண ரெட்டியார்,
சென்னை
805620 2324

திரு.Dr.V.ஜனார்த்தன ரெட்டி,
கோயம்புத்தூர்
94422 55311

திரு.Ln.Dr.Y.V.S.ரெட்டி, ஓசூர்
94432 07799

திருமதி.Dr.R.அனிதா சாந்தகுமார்,
பாண்டிச்சேரி
96003 86736



**பதிப்பாளர்**
டேக்பான் ரெட்டி நலச்சங்கம்
24, பிரதான சாலை, சித்தன்குடி,
பாண்டிச்சேரி - 605013

**வடிவமைப்பு:**
சக்தி கிரியேட்டர்ஸ்,
98410 25280

**இதழ் ஆக்கம்:**
செல்வமுத்துக்குமரன்




*அன்பு சொந்தங்களே! வணக்கம்!*
*நலம்.. நலம் நாட நாட்டம்!*

**ந**மக்கு நாம் நாடு நமது!!

நமது ரெட்டி சமுதாயத்தின் ஒற்றுமைக்காக வளர்ச்சிக்காக அரசு தரவேண்டிய சலுகைகளுக்காக டேக்பான் வழியாக நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் அடுத்தடுத்து நல்ல பலன் காணும் நிலையில் உள்ளன. ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு நமது ரெட்டி பண்பாடு மார்ச் இதழ் சற்று தாமதமாக உங்கள் வாசிப்புக்கு. பொருத்தருள்க.

நமது சமுதாயத்தினர் வைத்திருக்கும் வணிக நிறுவனங்க ளின் மூலமாக இதழின் வளர்ச்சிக்கு விளம்பரம் பெற்றுத் தாருங்கள். உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு தெரிவியுங்கள். இந்த இதழில் உத்தமர் ஓமந்தூராரின் பிறந்த நாள் நிகழ்ச்சியும், சமூக ஆர்வலர் முத்து வரத ரெட்டியார் அவர்களின் ஆற்றியத் தொண்டினை இந்த இதழில் தங்கள் பார்வைக்கு வழங்கியுள்ளேன். மேலும் தொடர் பிரசுரிப்பாக திவ்ய தேசங்கள், காவடிச் சிந்து, நெஞ்சில் நிறைந்தவர்கள் வழக்கம்போல் வந்திருக்கிறது. முத்தாய்ப்பாக நமது சங்கத்தின் பொதுச் செயலாளர் திண்டிவனம் வழக்கறிஞர் கு.கிருபாகரன் ரெட்டி அவர்களின் செல்வ குமாரத்தி திருமதி டாக்டர் ஏ.லாவண்யா ரெட்டி அவர்களின் பெண்களுக்கு உபயோகமான பிரத்யேக நேர்காணலும் இடம்பெற்றிருக்கிறது.

நீங்கள் அனுப்பும் குடும்ப செய்திகள், கலந்து கொண்ட நம் சமுதாய நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒளிப்படங்களோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள்! பிரசுரிக்கிறோம்! நமது சமுதாயத்தினர் வைத்திருக்கும் வணிக நிறுவனங்களின் மூலமாக இதழின் வளர்ச்சிக்கு விளம்பரம் வாங்கித் தாருங்கள்! சந்தா விபரமும் இதழில் உள்ளது. சந்தாவை செலுத்தி உதவுங்கள்! உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு தெரிவியுங்கள்.

தொடர்ந்து பயணிப்போம். இணைந்து சாதிப்போம்.

என்றும் அன்புடன்..
**ம.வெ.வைத்திலிங்கம் ரெட்டி**
வழக்குரைஞர்,
தலைவர் 'டேக்பான்' (ஆறு மாநில) ரெட்டி நல சங்கம்
98431 33287



# திருக்கூடலூர்

### ஊர்ப்பெயர் காரணம்

இந்த திருத்தலத்தில் உள்ள பெருமாள் வராக அவதாரமாக போற்றப்படுகிறார். அவர் அந்த அவதாரத்துடன் கோயிலின் உட்புறம் சென்றார்.

கோயிலின் சுவாமி கருவறையில் திருப்பாதங்களுக்கு மத்தியில் இருக்கும் இடமே உலகின் மையப் பகுதி என்று கருதப்படுகிறது. அங்கு நந்தக முனிவர் தேவர்களோடு கூடி வந்து சாமியை வழிபட்டதால் இந்த ஊர் கூடலூர் என்று பெயர் பெற்றது. பாடல் பெற்ற ஸ்தலம் என்பதால் கூடலூர் திருக்கூடலூர் என்றாயிற்று.

### வரலாறு

மதுரையை ஆட்சிபுரிந்த புகழ் பெற்ற அரசியின் பெயர் ராணி மங்கம்மாள் அவரின் கனவில் தோன்றிய நாராயணன், மீனவர்கள் வாழும் பகுதியில் தன்னுடைய சிலைகள் இருப்பதாகவும் அவற்றை மரியாதையுடன் எடுத்து வந்து கோயில் கட்டி வழிபாடு நடத்தும்படியும் கூறினார்.



அதன்படி ராணி மங்கம்மாள் தகுந்த மரியாதைகளுடன் அந்த சிலைகளை எடுத்துக் கொண்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார். ஆனால், அந்த சிலைகளை வைத்து எங்கு கோயில் கட்டுவது என்று அவருக்கு தெரியவில்லை. அவர் மனம் குழம்பி இருந்த நிலையில் பேரொளி ஒன்று அவருக்கு வழிகாட்டியது. அந்த பேரொளி குறிப்பிட்டுக் காட்டிய இடத்தில்தான் இந்தக் கோயில் கட்டப்பட்டது. அந்த காலகட்டத்தில் ராணி மங்கம்மாவால் இந்த புனிதத் தலம் மிகவும் சிறப்பாக போற்றப்பட்டு வழிபாடு நடந்தது.

## புராணம்

அம்பரீசன் என்னும் மன்னன் நாராயணனின் மீது தீவிர பக்தி கொண்டவன். அதனால் தன்னுடைய படைகள் மீது எந்த கவனமும் செலுத்த வில்லை.

முழுமையாக பக்தியிலேயே மூழ்கினான். இதனைப் பயன்படுத்திக் கொண்ட எதிரிகள் அவனிடம் இருந்து நாட்டை கைப்பற்றிக் கொண்டனர். நாட்டை இழந்த அம்பரீசன் அதைப் பற்றி கவலைப் படாமல் நாராயணன் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டு அவருக்கான விரதங்களிலேயே கவனமாக இருந்தான்.

ஒருமுறை அவன் ஏகாதசி விரதம் இருந்த போது அங்கு துருவாசர் வந்தார். தியானத்தில் இருந்த அவன் முனிவரை கண்டுகொள்ள வில்லை. அதனால் துருவாசர் அவனை சபித்தார். முனிவரின் கோபத்துக்கு ஆளான அம்பரீசன் நாராயணனை வேண்டினார். தன் பக்தனை காப்பாற்றுவதற்காக நாராயணன் துருவாசர் மேல் தன்னுடைய சக்ராயுதத்தை ஏவினான்.

சக்ராயுதம் துரத்தியதால் பல திசைகள் ஓடிய



துருவாச முனிவர் பின்னர் நாராயணனை சரண் அடைந்து அவனிடம் மன்னிப்பு கேட்டார். நாராயணன் அவரை மன்னித்து அருளினார். அம்பரீசன் தனக்கு அருள்புரிந்த பகவானுக்கு இங்கு கோயில் கட்டி வழிபாடு நடத்தினான்.

அவனது பெயராலேயே இங்குள்ள பகவானுக்கு அம்பரீச வரதர் என்ற பெயரும் ஏற்பட்டது. இங்கு வந்து வழிபடுபவர்களுக்கு பகவானின் சக்ரமே பாதுகாப்பாக இருந்து அவர்களை வழிநடத்தும் என்பது நம்பிக்கை.

உலகில் உள்ள புண்ணிய நதிகளில் நீராடு வதால் பக்தர்களின் பாவங்கள் நீங்கி விட்டன.



அந்த பாவங்களை சுமந்த காவிரி நதி தன் பாவம் போக வழி என்ன என்று பிரம்மாவிடம் கேட்டாள் அதற்கு பிரம்ம தேவர் இந்த திருத்தலத்தில் உள்ள பெருமாளை வழிபட்டால் பாவங்கள் நீங்கும் என்றார். அதன்படி காவிரி இங்குள்ள பெருமாளை வழிபட்டு தன் பாவங்களை போக்கிக் கொண்டாள்.

அதேபோல முன்பு ஒரு காலத்தில் இந்த கோயில் வளாகத்தில் கிளி ஒன்று இருந்தது. அது அருகில் உள்ள மரத்தில் நாவல் பழங்களை பறித்து வந்து பெருமாள் முன்பு வைத்து ஹரி ஹரி என்று சொல்லி அவரை வணங்கி விட்டு செல்வது வழக்கமாக இருந்தது. ஒருநாள் அந்தக் கிளி நாவல் பழத்தை பறித்துக் கொண்டு வந்த போது வேடன் ஒருவன் அம்பை எய்துவிட்டான். அம்பு பாய்ந்த கிளி 'ஹரி ஹரி' என்று சொல்லியபடி தரையில் விழுந்தது.

அருகில் வந்த வேடன் கிளி பெருமாளின் பெயரை சொல்வதைக் கேட்டு பயந்து ஓடிவிட்டான். அப்போது பகவான் அந்த கிளிக்குக் காட்சி கொடுத்தான். அந்த கிளியிடம் பகவான் ''போன பிறவியில் நீ கல்வியில் செருக்குடன் திரிந்தாய். அதனால் இந்தப் பிறவியில் கிளியாக பிறந்து என் நாமத்தை மட்டுமே உச்சரிக்கும் பணியை செய்தாய்'' என்று சொல்லி சாப விமோசனம் அளித்தார்.

SMV

# SMV GROUP

## KOLLAM - KERALA

M/s. SMV (Firm), Kollam
M/s. Sreenivas Fabricsi Kollam
M/s. Vasanth & Co., Kollam
M/s. SMV Associates, Kollam
M/s. SMV Apparesal, Kollam
M/s. Transworld Textiles, Kollam
M/s. Kalpaka Financial Enterprieses, Kollam
M/s. Sreenivas, Kollam
M/s. Kavitha Traders, Kollam
M/s. SMV Associates, Kollam
M/s. Vasanth & Co., Thiruvananthapuram
M/s. Transworld Textils, Thiruvanthapuram
M/s. Vasanth & Co., Kottayam
M/s. Transworld Textiles, Chennai
M/s. Vasanth & Co., Mumbai
M/s. J.N. Trust, Kollam
M/s. Transworld Textiles, Mumbai
M/s. Transworld Textiles, Ahmedabad
M/s. Transworld Textiles, Surat

இரண்யாசட்கன் என்ற அரக்கன் ஒருமுறை பூமாதேவியுடன் யுத்தம் செய்து பூமியை பாதாள உலகில் கொண்டு போய் வைத்து விட்டான். எனவே, பெருமாள் வராக அவதாரம் எடுத்து பாதாளத்தில் இருந்து அவளை மீட்டு வந்தார் இந்த ஊரில் தரையை பிளந்து பூலோகம் சென்று இதன் அருகில் உள்ள ஸ்ரீமுஷ்ணத்தில் பூமியை மீட்டு வெளியில் வந்தார் என தல புராணம் கூறுகிறது.

## இலக்கியம்

திருமங்கையாழ்வார் 10 பாசுரங்களால் தன்னுடைய பெரிய திருமொழியில் இந்த ஊரை மங்களாசாசனம் செய்துள்ளார்.

## கல்வெட்டு

இந்த ஆலயம் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்டதாகும்.

## மூர்த்தி

இந்த ஆலயத்தில் உள்ள பெருமாள் வையம் காத்த பெருமாள் அதாவது ஜகத்ரட்சகன் என்பதாகும். இவரை உய்யவந்தார் என்றும் போற்றுகின்றனர். நின்ற திருக்கோலத்துடன் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கின்றார். உற்சவரின் திருநாமமும் அதே பெயரில் விளங்கியபோதும் அவர் கையில் செங்கோல் தாங்கி நிற்கின்றார். இங்குள்ள தாயார் பத்மாசினி. புஷ்பவல்லி என்று போற்றப்படுகின்றார்

## ஸ்தலம்

இந்த இடம் பெருமாள் வராக அவதாரம் எடுத்து பூமிக்குள் புகுந்த இடம் என்று புராணங்கள் போற்றுகின்றன இங்கு நந்தக முனி. அம்பரீசன், காவிரி போன்றவர்கள் பலன் பெற்றனர்.

## விருட்சம்

இந்த திருத்தலத்தின் விருட்சம் பலா மரமாகும்.

## தீர்த்தம்

இந்த ஆலயத்தில் சக்ர தீர்த்தம், காவிரி நதி ஆகியவை புனித தீர்த்தங்களாக விளங்குகின்றன.

## திருவிழாக்கள்

இந்த திவ்ய தேசத்தில் வைகாசி மாதத்தில் பத்து நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகின்றது.

## பூஜைகள்

இந்த ஆலயத்தில் வைகானஸம் என்னும் ஆகம முறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன.

## வழிபடுவதால் ஏற்படும் பலன்கள்

உலகப் பொருட்களின் மீது தீராத ஆசை கொண்ட நாம் பதவி வேண்டும், பொருள் வேண்டும். சொத்து பத்துக்கள் வேண்டும் என்று பகவானிடம் கேட்கிறோம். ஆனால் யாருமே பகவானே நீ எனக்கு வேண்டும் என்று கேட்பதில்லை. அப்படி கேட்டால் அவன் தன்னைக் கொடுக்க தயாராக இருக்கிறான் என்று நிரூபிக்க திவ்யதேசம் இது பகவானே நேருக்கு நேராக தரிசனம் செய்ய ஆசைப்பட்டார் நாந்தக முனிவர். அவருக்கு அப்படி தரிசனம் தந்தான் எம்பெருமான்

எனவே இந்தக் கோயிலில் வந்து மனமுருகிப் பிரார்த்தனை செய்து நியாயமாக எதைக் கேட்டாலும் அவன் நிச்சயமாக நிறைவேற்றித் தருவான். வயது கடந்தும் பேச்சுவராத குழந்தைகள் என்ன தவறு செய்தோம் என்பதை அறியாமலேயே தண்டனை அனுபவிப்பார்கள். அடுத்தநாள் பொழுது நல்லபடியாகப் போகவேண்டும் என்ற தவிப்போடு தினந்தினம் துன்பமும் நரக வேதனையும் அனுபவிப்பார்கள் ஆகியோர் வையங்காக்கும் பெருமானை தரிசித்தால் குறைகள் நீங்கி நல்வாழ்வு அமையும்.

## தனித்தன்மை

இந்த திவ்ய தேசத்தில் கருவறையின் பின்பக்கம் சுவாமிக்கு இடது புறத்தில் தலவிருட்சமான பலாமரம் உள்ளது. இந்த மரத்தில் இயற்கையாகவே சங்கு வடிவம் உண்டாயிற்று. பெருமாளின் சக்கரம் துருவாசரை விரட்டியபோது இங்கு சங்கு பிரதானமாக இருந்ததாம். சங்கு வடிவம் பலா மரத்தில் அமைந்தது இந்த ஆலயத்தில் மட்டுமே உள்ள தனித்தன்மையாகும்.

## செல்லும் வழி

திருவையாறில் இருந்து கும்பகோணம் செல்லும் பாதையில் 11வது கிலோ மீட்டர் தூரத்தில் இந்த ஊர் உள்ளது. தஞ்சாவூரிலிருந்தும் திருவையாறு மார்க்கமாக கூடலூருக்குச் செல்லலாம். காலை 7.30 மணி முதல் 12.30 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் இரவு 7.30 மணி வரையிலும் இந்த ஆலய நடை திறந்திருக்கும்.

– தொடரும்

*With Best Compliments From*

House
044-25733297



Office
044-25734230
044-42034046

**MJF.Lion. G.VARADARAJAN REDDIAR**

Lions Clubs International
Chairman
G.V.R. Groups - M/s G.V.R. Agencies
"G.V.R. Bhavan"
393, T.H. Road, Thiruvottiyur, Chennai- 600 019.

**Industrial Canteen Contractor**

Canteen
**M/s. Carborandum Universal Ltd,**
Thiruvottiyur, Chennai - 600 019.

Canteen
**M/s. Royal Enfield India Ltd,**
Thiruvottiyur, Chennai - 600 019.

Canteen
**T.I Cycle of India,**
Ambattur, Chennai-600 058.

Canteen
**M/s. Esun Rerolls India Ltd,**
Hosur P.O.Krishnagiri Dt.

Canteen
**M/s. Esun MR Tap Changes,**
Thirunintravoor,P.O.,Thiruvalloor Dt.

Canteen
**M/s. Carborandum Universal Ltd,**
Sri Perumbudur P.O., Kancheepuram Dt.

# டேக்பான் நிகழ்வுகள்!

## சென்னை



20.09.2025 காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை சென்னை சவேரா ஒட்டலில் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் CMK ரெட்டி அவர்களின் அழைப்பை ஏற்று தமிழகம், பாண்டிச்சேரி மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்து நம் இன சொந்தங்கள் கலந்து கொண்டு தமிழகத்தில் உள்ள ரெட்டி சொந்தங்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பு (federation) உருவாக்க நல்லதோர் ஆலோசனைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

மூத்த பெருமக்கள் மதுரை பட்டாபி ரெட்டியார், புதுவை வைத்திலிங்கம் ரெட்டியார், தாம்பரம் ஜெயராமன் ரெட்டியார், அனுஜ் டைல்ஸ் நிறுவன அதிபர் குமார் ரெட்டியார், நம்ம வீடு வசந்த பவன் ஒட்டல்களின் அதிபர் ரவி ரெட்டியார், கோயம்புத்தூர் ஜனகராஜன் ரெட்டியார், தாம்பரம் ராஜா ரெட்டி, மகேந்திரன் ரெட்டி, பெருங்களத்தூர் ராஜ்குமார் ரெட்டியார், சென்னை ஒபியார் பட்டாபி ரெட்டியார், நேமிதாசன் ரெட்டி, விளாத்திகுளம் செல்வகுமார் ரெட்டியார்,

நெல்லை டாக்டர் வெங்கடேஷ் பாபு ரெட்டி, ஒசூர் ஒய்.வி.எஸ்.ரெட்டி, ஒசூர் கோபாலகிருஷ்ணன் ரெட்டி, ஒசூர் ராஜலட்சுமி ரெட்டி, சென்னை டாக்டர் ஹேமந்த்குமார் ரெட்டி, ஜாபர்கான்பேட்டை செல்வராஜ் ரெட்டி, நெல்லை இராமசுப்பு ரெட்டி, திருவண்ணாமலை வீரமணி ரெட்டி, திண்டிவனம் பாபு ரெட்டி, திண்டிவனம் கிருபாகரன் ரெட்டி, கார்த்திக் ரெட்டி, சிறுவை இராமமூர்த்தி ரெட்டியார், துறையூர் ரவி ரெட்டியார், சென்னை இரவிச்சந்திரன் ரெட்டியார், அப்பாசாமி ரெட்டி, அனில் குமார் ரெட்டி, இளங்குமரன் ரெட்டி, ராஜகுமாரன் ரெட்டி, மின்னல் பிரபு ரெட்டி, நாகேந்திரன் ரெட்டி, கோதண்டராமன் ரெட்டி உள்பட பல்வேறு ஊர்களில் இருந்து வந்து கலந்து கொண்டு கூட்டமைப்பு வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டமைப்பு நிறுவும் பணிக்காக தற்காலிக ஒருங்கிணைப்பு குழு அமைக்கப் பட்டுள்ளது.

*With Best Compliments from*



## Ln T.V. Raj MJF

Vice president - Takepon Reddy Nala Sangam
Patron - Yogi Vemana Educational trust, Hosur
Distruict Chairperson - Lions Club
Secretary of Table Tennis Association,
Krishnagiri district

**No.3, Vidhya nagar, Hosur**
**Ph: 78068 03255**






# YOGI VEMANA MATRIC.HR.SEC.SCHOOL

8th K.M. Hosur - Bagalur Road,
Near Eluvapalli Bus Stop, Hosur, Krishnagiri Dt.



**Ln.G.Muni Reddy**
Chariman



**Ln.R.Srinivasa Reddy**
Secretary (Admin)



**G.KRISHNA REDDY**
Secretary (Active)



**N.PRAKASH REDDY**
Joint Secretary



**N.KRISHNA REDDY**
Treasure

Yogi Vemana Matriculation Hr Sec School was started in the year 2007 and is the unit of Yogi Vemana Educational and Welfare trust. The trust was ingrained by the Reddy community people of Hosu r and Denkanikotta Taluks. It was started with classes LKG TO VIII STD, but today we have classes till XII th STD .At present we do have strength of about 800 students. 700 students in matric stream and 100 students in CBSE STREAM.

Our main objective is to inculcate social moral ethical and spiritual values of education among students.we also aspire to nurture discipline, courage and excellence among our students.

I. To impart man making, character building education.

II. To bring out lalent, that is inherent in each child.

III. To build confidence and prepare the child to be multiple achiever

IV. To offer quality education to pupils of all communities without any discrimination at the least expenditure and without accepting any kind of donation from the parents. Proudly we are happy to say that we are producing 100°/o result in the Board Examination for the past 6 years.



# Sri Bhagavathy
## Traders Pvt Ltd.,



- Warehousing
- 3PL Service Providers
- Sales & Marketing

**Corporate Office:** P.V.Sreedharan Road,
Kumbalam PO., Cochin - 682506
0484 3083311, 98460 45205
info@sribhagavthy.com



*With best compliments*
*To grace the function sucess*

## Ln Dr Y.V.S. Reddy

Golden Jubilee social worker,
Adviser Takepon Reddy Nala Sangam

- Father of Hosur Lionism, projects: Adopted one Govt Hr sec school from 20 years now it is fully equipped modren co education school strength 1800 students.
- Developed one public walkers way 2 km with nearly one lakh trees with the support of Govt & public. project cost nearly 7crores.
- Developed Scouts & Guides training center in 5.5 acers at Hosur.
- Lions Eye Hospital free for all poor people in Hosur with the Support of club members & friends in one accer land.
- Project cost 4 crors other than land cost Nithya Annadasoha Bhavan at Anekal my kula dhaivam Thimmarayaswamy temple.
- project cost nearly 5crores with the support of trust & Devotees.
- Totall small projects from 52 years nearly 700 projects. Target 1000 projects in my life.

# HOTEL ARYAAS

## HIGH QUALITY PURE VEG.RESTAURANT

VILLIYANUR MAIN ROAD, REDDIYARPALAYAM, PUDUCHERRY – 605010.

ஆர்டரர்கள் எங்களிடம் குறித்த நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்

**PROP: T.REGUNATH**

**ALL PARTY ORDERS UNDERTAKEN WITH QUICK AND TIMELY DELIVERY.**





*With Best Compliments from*




# ஆதம்பாக்கம் ஜனோபகார சாஸ்வத நிதி லிமிடெட்

107/62, புதுப்பேட்டை தெரு, ஆலந்தூர்,
சென்னை - 600 016. தொலைபேசி : 044 - 2234 1794

---

# Adambakkam Janopakara Saswatha Nithi Limited

**107/62, Pudupet Street, Alandur,**
**Chennai - 600 016. Phone : 044 - 2234 1794**

**18.12.2006ல் பவழ விழா கண்ட நிறுவனம்**

**நேர்காணல்** | ★ செல்வ முத்துக்குமரன்

## கனவுகளைத் துரத்துங்கள்! திட்டமிடுங்கள்! உழையுங்கள்!

# வெற்றி நிச்சயம்!

❑ இளம் மருத்துவர் டாக்டர் **லாவண்யா** MS general surgery



திண்டிவனத்தைச் சேர்ந்த டாக்டர் லாவண்யா இளநிலை மருத்துவ படிப்பை முடித்து தற்சமயம் MS general surgery இறுதி ஆண்டு படிக்கிறார். மிகச்சிறந்த முறையில் பள்ளிக் கல்வி பயின்று அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர். திண்டிவனம் இவரின் பூர்வீகம், இவர் தந்தை G.கிருபாகரன், வழக்கறிஞர். 'டேக்பான்' ஆறு மாநில ரெட்டி நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர். லாவண்யாவின் தாயார் கோமதி. இவரின் மூத்த சகோதரர் Dr.G.நிர்மல் குமார் ரெட்டி MD Anesthesia முடித்து ஹைதராபாத்தில் முன்னணி மருத்துவமனையில் பணிபுரிகிறார். இவர் அண்ணி Dr.N.அமுல்யா, MS general surgery படித்து ஹைதராபாத்தில் முன்னணி மருத்துவமனையில் பணிபுரிகிறார். Dr.G.லாவண்யாவின் கணவர் Dr.C.அஜித்குமார் இளநிலை மருத்துவம் முடித்து MS ortho இறுதியாண்டு பயில்கிறார். ரெட்டி பண்பாடு இதழுக்காக இளம் மருத்துவர் டாக்டர் லாவண்யாவை சந்தித்து உரையாடினோம்..

**? மருத்துவக் கல்வி பயில வேண்டும் என்ற எண்ணம் அல்லது ஆசை உங்களுக்கு எப்படி ஏற்பட்டது? அதற்கு உந்துதலாக இருந்தவர்கள் யார்?**

!: சிறுவயதில் இருந்தே மனித உயிரைக் காப்பாற்றுவதுதான் வாழ்க்கையின் மிகப்பெரிய அர்த்தம் என்று நம்பினேன். என் குடும்பத்திலும், குறிப்பாக என் பெற்றோர்களின் மனிதநேயம் கண்டு ஈர்க்கப்பட்டேன். ஒருவருக்கொருவர் உதவும் வாழ்க்கைதான் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று அவர்கள் சொல்லி வளர்த்தது, மருத்துவத் துறையை தேர்வு செய்ய சிறுவயது முதலே எனக்கு உந்துதலாக இருந்தது.

**? உங்கள் தாய் தந்தையர் இந்த படிப்பை படிப்பதற்கு எப்படி உற்சாகப்படுத்தி ஊக்கப் படுத்தினார்கள்?**

!: மருத்துவக் கல்வி என்பது கடினமான பாதை. ஆனால் அந்த பாதையில் நான் தனியாக




நடந்ததே இல்லை. மேலும் என் குடும்பத்தில் ஏற்கனவே உள்ள மூத்த மருத்துவர்கள் என் பெரியப்பா டாக்டர் G.சிவஞானம், மற்றும் என் அண்ணன் டாக்டர் G.நிர்மல் குமார் ரெட்டி மற்றும் என் பெற்றோர்கள் எனக்கு அந்தப் பாதையில் சிரமமின்றி வழிகாட்டியதோடு மட்டுமல்லாமல் மனதளவிலும் உறுதியாக இருக்க கற்று கொடுத்தார்கள். அவர்கள் அளித்த ஊக்கமும், உற்சாகமுமே நான் இந்த அளவிற்கு மருத்துவராக பணி புரியக் காரணமாகும்.

**? மருத்துவக் கல்வி பயின்ற காலத்தில் புதிய புதிய நோய்கள் மனிதர்களுக்கு வருவது குறித்து என்ன எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டது?**

!: என் அனுபவத்தில் புதிய நோய்கள் உருவாவதாக தெரியவில்லை. மக்களின் வாழ்க்கை முறை, எதிர்பாராத அளவு மாற்றம் கண்டுள்ளதால் நோயின் தாக்கம் அதிகரிக்கும் காரணியாக உள்ளது. மருத்துவர் என்ற முறையில் நான் தெரிவிப்பது யாதெனில், நோய் வந்த பின் சிகிச்சை எடுப்பதைவிட நோய் வராமல் தடுப்பதே முக்கியது ஆகும். (Prevention is better than Cure).

**? மருத்துவக் கல்வி முடித்து ஒரு மருத்துவராக அதில் சிறப்பு மருத்துவம் என்ன தேர்ந்தெடுத்தீர்கள்? அது குறித்த புதிய சிகிச்சை முறைகள் என்ன என்பதை சொல்லவும்..**

!: இளநிலை மருத்துவக் கல்வி (MBBS) முடித்த பின்பு நான், பொது அறுவை சிகிச்சை படிப்பை (MS. General Surgery) தேர்ந்தெடுத்தேன். நோயாளிகளை நேரடியாக சந்தித்து அறுவை கிச்சை செய்து நிவாரணம் துரிதமாக கிடைக்க இத்துறை வழி வகுக்கிறது. நவீன உலகில் Robotic Surgery, Laparoscopic Surgery, Endoscopic procedures மூலம் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு Enhanced recovery after surgery (ERAS) நோயாளி இயல்பு நிலைக்கு திரும்ப வழிவகுக்கிறது.

**? இன்றைய நவீன வாழ்க்கை முறையில் வெளியிடங்களில் உணவகங்களில் மற்றும் இணையம் வழியாக உணவை வீட்டுக்கு வரவழைப்பது.. இவை அதிகமாகி உள்ளன. இந்த வாழ்க்கை முறை உடல் நலத்துக்கு நல்லதா அதில் எந்த வகையில் கவனமாக இருக்க வேண்டும்?**

!: தற்போதைய வாழ்க்கை முறையில் online order செய்து, உணவுப் பொருட்களை பெற்று உண்பது அதிகமாகி உள்ளது. அவசர அத்தியாவசிய தேவைக்கு மட்டும் சிறந்த உணவகங்களில் order செய்து உண்பது ஏற்புடையது. ஆனால் இதையே தொடர்ந்து செய்வது உடல் நலத்திற்கு தீமை விளைவிக்கும்.

உடல்பருமன், சர்க்கரைவியாதி, இரத்தக் கொதிப்பு மற்றும் இன்னபிற வயிற்று உபாதைகளுக்கு வழிவகுக்கும். வீட்டில் பாரம்பரியமான முறையில் தயாரித்து உண்பதே சரியான உணவு முறை என்பது என் கருத்து.

**? எல்லா நோயாளிகளும் ஒரே மாதிரி இல்லை. ஒவ்வொருவரின் உடல் நிலையும் ஒவ்வொரு மாதிரி. அதில் நீங்கள் சவாலாக சிகிச்சை அளித்த அனுபவங்கள் குறித்து சொல்லுங்களேன்?**

!: ஒவ்வொரு நோயாளியும் ஒரு புத்தகம் போன்றவர். மருத்துவர்கள் அவர்களை சரியாக வாசிக்க வேண்டும்! நோய்கள் வேறுபட்டிருக்கலாம். ஆனால் நாம் எல்லா நோயாளிகளையும் மிகவும் கவனமாகவே அணுக வேண்டும்! மிகச் சமீபத்தில் 17 வார கர்ப்பிணி பெண், வலியோடு சிகிச்சைக்கு வந்தார். ஸ்கேன் செய்ததில் குழந்தை ஆரோக்கியமாக இருந்தது. ஆனால் தாய்க்கு குடல் வால் வீக்கம் பிரச்சினை இருந்தது. இதற்கு அதிமுக்கிய காரணம் வெளி உணவுகளை அதிகம் உட்கொள்வது. செரிமானம் சரிவர இல்லாதது. இதை அப்படியே விட்டால் கருவில்

வளரும் குழந்தையின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விடும். Laparoscopic சிகிச்சை மூலம் சிறுதுளைகள் இட்டு அறுவை சிகிச்சை செய்த பின் தாயும், சேயும் நலமாக உள்ளனர். என்னுடைய அனுபவத்தில் இப்பெண்ணுக்கு நடத்தப்பட்ட அறுவை சிகிச்சை சவாலான ஒன்று. Medicine is not just Science it's Patient's judgment and Compassion!

**? இன்றைய இளைஞர்களுக்கு பொதுவாக உடல் உழைப்பு குறைந்துவிட்டது. ஒரே இடத்தில் அமர்ந்தபடி அதிகமான மூளைப்பணி உள்ள வாழ்க்கைச் சூழல்! அதனால் ஏற்படும் பதட்டங்களிலிருந்து எப்படி விடுபடுவது? நோய் வராமல் தற்காத்துக் கொள்ளும் வாழ்க்கை முறை, உணவு முறை எப்படி இருக்க வேண்டும்?**

!: இன்றைய இளைஞர்களுக்கு Physical activity குறைந்துள்ளது உண்மைதான். அதற்கு மிக முக்கிய காரணம் செல்போன் அதிகம் பயன்படுத்துவது. இளம் வயதிலேயே Stress ஏற்பட்டு Anxiety, Depression வர வாய்ப்புள்ளது. இதனை தவிர்க்க குறைந்தது ஒரு மணி நேரமாவது தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். தூக்கம் 7 மணி முதல் 8 மணி நேரம் அவசியம். போன், கம்ப்யூட்டர், டி.வி பயன்பாட்டு, நேரத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். சமச்சீரான உணவை நேரம் தவறாமல் உட்கொள்வது அவசியமாகும். இன்றைய வாழ்க்கை முறையில் இவற்றை பின்பற்றினால் ஆரோக்கிய வாழ்வு நிச்சயம்.

**? பதட்டம் நிறைந்த வேகமாக ஓடக்கூடிய வாழ்க்கை முறையில் இளம் வயதினருக்கு இதய நோய், ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி போன்ற நோய்கள் வருவதற்கு என்ன காரணம் ? அவற்றை தற்காத்துக் கொள்ளும் உணவு முறை, வாழ்க்கை முறை, மருத்துவ முறைகள் என்னென்ன?**

!: இளம் வயதினரிடையே இதுபோன்ற நோய்கள் தற்காலத்தில் அதிகரித்து வருவது உண்மையே. இதற்கு மிக முக்கிய காரணம் Junk food என்று சொல்லக்கூடிய சத்தற்ற உணவு அல்லது துரித உணவு! நோய் வந்தபின் சிகிச்சை எடுப்பதை விட வராமல் தடுப்பதே சிறந்ததாகும். துரித உணவு, புகைப்பிடித்தல், போதை பொருட்கள் உபயோகம், அதிக உப்பு, அதிக சர்க்கரை இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும். முறையான உணவு உட்கொள்ளும் பழக்கத்தை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

**? இன்றைய இளைய தலைமுறையினரிடையே திருமணம் ஆகி சில ஆண்டுகள் கழித்தே பெரும்பாலும் குழந்தை பெறக்கூடிய உடல் நிலை உள்ளது. இதற்கு என்ன காரணம்? இதை வாழ்க்கை முறையில் சரி செய்து கொள்வது எப்படி?**

!: காலம் கடத்து திருமணம், தாங்கள் விரும்பும் போது குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என தம்பதிகள் பிளான் செய்வது, ஹார்மோன் பிரச்சனைகள், தரமற்ற உணவு உட்கொள்ளுதல், Sedentary Lifestyle இவையெல்லாம் முக்கிய சில காரணங்கள். உடல் பருமன் தவிர்ப்பது, குறிப்பிட்ட வயதில் குழந்தை பெற்றுக் கொள்ள பிளான் செய்வது, புகைப்பிடித்தல், போதை பழக்கங்கள் கைவிடுவது, சத்துள்ள உணவு உட்கொள்ளுதல், சரியான ஓய்வு, முறையான தூக்கம் முறையான மருத்துவ ஆலோசனை பெறுதல் இவை உரிய காலத்தில் குழந்தை பெற்றுக் கொள்ள நல்ல ஆலோசனைகள் ஆகும்.

**? பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீர்கேடுகள் இவற்றால் ஏற்படும் நோய்கள் மற்றும் உடல் மனக் குறைபாடுகள் எவை? அவற்றை எப்படி வராமல் தற்காத்துக் கொள்வது?**



!: குளிர்காலங்களில் பெரும்பாலும் சுவாச காய்ச்சல் (Respiratory disease) ஏற்பட்டு மூச்சு திணறல், இருமல், சளி மற்றும் மார்பு வலி போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. டெங்கு, மலேரியா போன்ற நோய்களும் மழைக்காலங்களில் கொசுக்களால் பரவலாக உள்ள நோய்களாகும். சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தடுப்பூசிகளை உரிய காலத்தில் செலுத்தவேண்டும். இயற்கையாகவே உடலில் எதிர்ப்பு சக்தி உள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க வைட்டமின் சி, டி ஆண்டி ஆக்ஸிடண்ட் கள் நிறைந்த உணவுகளை உண்பது அவசியம்.

**? மருத்துவப் பணி என்பது சேவை சார்ந்தது மனித உயிருக்கும் தொண்டும் கூட! இதில் உங்களுடைய எதிர்கால லட்சியம் அல்லது இன்னும் மேற்படிப்பு போன்றவை குறித்து சொல்லவும்...**

!: மருத்துவம் எனக்கு பணியல்ல, அது ஒரு பொறுப்பு. என் எதிர்கால லட்சியம் என்னவென்றால் Advanced Surgical Skills ஐ கற்று சிறப்பான சேவை செய்வதாகும். நோய் கண்டறிந்து ஆரம்ப கட்டத்தில் சிகிச்சை செய்து குணப்படுத்துவதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது குறிப்பாக கிராமப்புற மகளிருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது!

**? இன்றைய இளைய தலைமுறை ஆண் பெண்களிடம் திருமண உறவில் நிறைய மன முறிவு ஏற்பட்டு விவாகரத்து வழக்குகள் குவிந்து வருகின்றன! இதற்கான அடிப்படை காரணங்கள் என்ன? அவற்றை சரி செய்து கொள்ள உங்களுடைய உளவியல் ஆலோசனை என்ன?**

!: மனமுறிவுக்கு அடிப்படை காரணம் Communication gap, Work related stress, Ego, அதிக எதிர்பார்ப்புகள் பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் விவாகரத்துகளை தவிர்க்கலாம். பேசித் தீர்த்தல், பரஸ்பரம் பொறுமையைக் கடைபிடிப்பது, ஒருவரையொருவர் மதித்து நடத்தல் அவசியம். தேவையானவர்களுக்கு கவுன்சிலிங் அவசியம். Understanding தான் மிக முக்கிய தேவை.

**? நம் சமுதாயப் பெண்களில் ஒரு பெண் மருத்துவராக திகழ்கிறீர்கள் இன்றைய நம் சமுதாய இளைய தலைமுறைப் பெண்களுக்கு உங்களுடைய வாழ்க்கை அனுபவம் தந்த பாடங்கள் ஆலோசனைகள் என்ன என்பதை இந்த நேர்காணல் வழியாக சொல்லவும்...**



டாக்டர் லாவண்யா கணவர் டாக்டர் அஜித்குமாருடன்..

!: Financial independence முக்கியம், Self respect and confidence அவசிய தேவை. குடும்பம் மற்றும் வாழ்க்கை தொழில் இவற்றை சமநிலையாகக் கொண்டு செல்ல வேண்டும். உங்கள் கனவுகளைத் துரத்துங்கள். திட்டமிடுங்கள்! உழையுங்கள்! வெற்றி நிச்சயம்! பெண் என்பவள் சமுதாயத்தை மாற்றும் சக்தி என்பதை நாம் அனைவரும் உணர்ந்து பெண்களை மதித்துப் போற்ற வேண்டும்!

**? உங்கள் கணவரும் ஒரு மருத்துவர் என்று அறிந்தோம். இருவரும் மருத்துவராக பணி புரியும் அனுபவம், மருத்துவமனைகளில் குடும்ப உறவில் எப்படி இருக்கிறது? அதில் உள்ள சாதக பாதகங்கள் என்ன?**

!: Professional Respect ஐ பேணுகிறோம். ஒருவரை ஒருவர் புரிந்து நடக்கிறோம். இரு துறைகளிலும் ஏற்படும் அறிவியல் முன்னேற்றங் களை ஒருவருக்கொருவர் அவ்வப்போது பரிமாறிக் கொள்கிறோம். Mutual understanding உள்ளதால் வாழ்க்கையில் சாதகங்கள் கண்முன் தெரிகிறது. அன்பும் புரிதலும் இருந்தால் கணவன் மனைவி இருவரும் இணைந்து எந்தத் துறையாக இருந்தாலும் வெற்றி பெற முடியும்! சாதனைகள் புரிய முடியும் என்று நம்புகிறேன்! ■



# நற்சிந்தனைகள்

- எப்போதும் வெற்றி சாத்தியமல்ல என உணர்
- சிறுசிறு தோல்வி அவசியம்
- நல்ல நண்பர்கள் நமக்கு அவசியம்
- நம்பிக்கை அவசியம், ஆனால் தன்பலம் உணர்
- பிறரிடம் நல்லதை நோக்கு
- கடந்த காலத்தின் பாடம் உணர்
- நிகழ்காலம் பயன்படுத்து
- எதிர்காலத்திற்கு தயார் ஆகு
- இன்முகம் பழகு
- வெற்றி என்பது பணம் மற்றும் பொருள் மட்டுமல்ல
- மகிழ்ச்சி மனதைப் பொறுத்தது
- இறையை நினை; தீதும் நன்றும் பிறர் தர வாரா


## வெங்கடசுப்பா ரெட்டியார் மஹால்
### சீத்தாராமன் ரெட்டியார் காம்ப்ளக்ஸ்

நெ. 1, சீத்தாராமன் வீதி, ECR ரோடு அருகில்,
வடக்கு கிருஷ்ணா நகர், இலாஸ்பேட்டை, புதுச்சேரி - 605 008.

**✆ 0413 - 2201020, செல் : 89256 86626.**

**விழா அரங்கம் A/c.**
**Function Hall**
250 பேர் அமரும் வசதி

**விருந்து அரங்கம்**
Dining Hall
100 பேர் அமரும் வசதி

**ஓய்வு அறை A/c**
Guest Room
**2 அறைகள்**




Location QR

# டேக்பான் நிகழ்வுகள்!

**கடலூர்**







தென்னிந்திய ரெட்டி ஜன சங்கத்தின் சார்பில் கடலூர் திவான் பகதூர் ஸ்ரீ சுப்பராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் 19.03.2026 யுகாதிப் பண்டிகை விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தலைவர் கே.வி.முத்து மல்லா ரெட்டியார் தலைமை தாங்கினார். செயலர் எம்.இரவிச்சந்திரன் ரெட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினார். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. 'இனியெல்லாம் சுகமே' என்ற தலைப்பில் செந்தமிழ்ச்சுடர், சன் டிவி புகழ் திரு.ஏ.சிவக்குமார், சிறப்புரையாற்றினார். துணைத் தலைவர் திரு.எம்.வி.வைத்திலிங்க ரெட்டியார் தெலுங்கு மொழியின் சிறப்புகள் குறித்தும் தெலுங்கு மொழியின் அவசியம் குறித்தும் வலியுறுத்தி பேசினார். சங்கத்தின் சார்பில் கல்வி உதவித்தொகை பெற்று பயனடைந்த நம் இன மாணவர்கள் இருவர் சார்பில் சங்க நிதியாக தலா ரூ.10,000/ நன்கொடை தலைவரிடம் வழங்கப்பட்டதை அனைவரும் மகிழ்வுடன் பலத்த கரகோஷம் செய்து பாராட்டினர். ரூ.25 இலட்சத்திற்கு நம் இன மாணவ மாணவியருக்கு ஆண்டு தோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் பஞ்சாங்கம் வாசிக்கப் பட்டது. முடிவில் பொருளாளர் ஏ.ரவிக்குமார் ரெட்டியார் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். வந்திருந்த திரளான ரெட்டி சொந்தங்களுக்கு யுகாதி விருந்து பரிமாறப்பட்டு நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.



## பிறந்த நாள் வாழ்த்து!

பிறந்த நாளும் வந்தது
பிரியமுடன் நாங்கள் வாழ்த்துகிறோம்!

நல்ல நாளும் வந்தது
நற்றமிழால் நாங்கள் வாழ்த்துகிறோம்

குறைவற்ற செல்வ வளத்தை
குருவருளால் பெற்று வாழ்ந்திடுக!

இனிமையான இன்ப நிகழ்வுகளை
இறையருளால் பெற்று வாழ்ந்திடுக!

பாசமாக உறவுகளை அரவணைத்தே
பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்திடுக!

உயிரினும் மேலான நட்புகளால்
உன்னத வாழ்வு வாழ்ந்திடுக!

ஊரார் போற்ற வளத்தோடும்
நாள்தோறும் நன்றாக வாழ்ந்திடுக!

இந்நாள் போல் எந்நாளும்
இனிதாக வாழ்ந்திடுக! வாழ்ந்திடுக!


மனம் நிறைந்து வாழ்த்துகிறோம்!
மங்கலமாய் வாழ்ந்திடுக! வாழ்ந்திடுக!

**– கவிஞர் ஜீவாஅசோகன்**
திருவண்ணாமலை.



# ஹைதராபாத் சமஸ்தானத்தை மீட்டெடுத்த தமிழர்!

★ எஸ்.ராஜகுமாரன்



இந்தியா சுதந்திரமடைந்த தருணத்தில் நாடு முழுவதும் அலையடித்த ஆனந்தம் அளவிட முடியாதது. அதேவேளையில், உயர்மட்டத் தலைவர்களால் அந்த மகிழ்ச்சியை முழுமையாகக் கொண்டாட முடியவில்லை. நாட்டைக் கட்டமைக்கவும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் ஏகப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. அதில் மிக முக்கியமான பிரச்சினை இந்திய சமஸ்தானங்கள் இந்திய அரசுடன் இணைப்பது தான். அப்போது இந்தியாவில் 500க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள் இருந்தன. ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்ட சுயாட்சி அமைப்பாக அவை இருந்தன. சில சமஸ்தானங்கள் சுதந்திர இந்தியாவுடன் இணைய மறுத்து அடம்பிடித்தன. அவற்றில் முக்கியமானது ஹைதராபாத்.

நிஜாம் மன்னரின் ஆளுகையின் கீழ் இருந்த ஹைதரபாத்தில் பாகிஸ்தான் ஆதரவு ரஜாக்கர்கள் ஏற்கெனவே பல வகையிலும் கலகங்கள் செய்து வந்தனர். இப்படியான சூழலில், ஹைதராபாத் சமஸ்தானத்தை மீட்டெடுக்க, நாட்டின் முதல் உள் துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் பட்டேல் இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கைகளைத் தொடங்கினார். சென்னை மாகாணத்திற்குப் பக்கத்தில் இருந்த ஹைதராபாத் சமஸ்தானத்தை மீட்பதில், ஓமந்தூர் ராமசாமியின் உதவியும் ஒத்துழைப்பும் தேவைப்பட்டது. சென்னை மாகாண முதலமைச்சராகப் பதவிவகித்த ஓமந்தூரார், ஹைதராபாத் சமஸ்தானத்தை மீட்கும் விஷயத்தில் பெரும் பங்காற்றினார்.

1947 நவம்பர் மாதத்தில் ஹைதராபாத் சமஸ்தானம் ரஜாக்கர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அக்காலகட்டத்தில் ஹைதராபாத் நிஜாம் அடிக்கடி முகம்மது அலி ஜின்னாவுடன் ரகசிய ஆலோசனைகள் நடத்திவந்தார். எந்த நேரமும் ஹைதராபாத் சமஸ்தானம் பாகிஸ்தானுடன் இணைக்கப்படலாம் என்ற வதந்தி நாடெங்கும் பரவியது. இது டெல்லியின் உயர்மட்ட காங்கிரஸ் தலைவர்களிடையே பெரிய பதற்றத்தை ஏற்படுத்தியது.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் நடக்கும் தேச விரோத சதி வேலைகளை ஓமந்தூரார் கூர்ந்து அவதானித்து வந்தார். பெல்லாரி மாவட்ட ஆட்சியரான ஐ.சி.எஸ்.கே.எம்.அனந்தராமன், சென்னை மாகாணப் பகுதி ராணுவத் தளபதி மேஜர் ஸ்ரீ நாகேஷ் உள்ளிட்ட பலரைத் தினமும் தொடர்புகொண்டு நிலவரங்களை அறிந்து டெல்லிக்குத் தகவல்களை அனுப்பிக்கொண்டே இருந்தார். இவற்றின் அடிப்படையில் பல்வேறு கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. சர்தார் வல்லபாய் பட்டேல் ஓமந்தூராரை அடிக்கடி தொலைபேசியில் ஆலோசனை கேட்டு செயல்பட்டார். ஹைதராபாத் சமஸ்தானத்தில் படை பலமும் ஆயுதங்களும் பெரிய அளவில்



ரகசியமாகக் குவிக்கப்பட்டு வருகின்றன என்று ஓமந்தூரார் எச்சரித்தார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, இந்தியாவின் ஏஜெண்ட் ஜெனரலாக வல்லபாய் பட்டேலின் நம்பிக்கைக்குரிய அதிகாரியாகச் செயல்பட்ட கே.எம்.முன்ஷி நியமிக்கப்பட்டார். 1947 டிசம்பர் 24ல் ஹைதராபாத் நிலவரத்தை நேரில் கண்டு ஆய்வு செய்து, ஓமந்தூரார் சொன்ன தகவல்கள் சரியானவை என்பதை முன்ஷி உறுதிப்படுத்தினார். அதன் பிறகுதான் இந்திய அரசாங்கம் வேகமாகச் செயல்படத் தொடங்கியது. ஹைதராபாத் சமஸ்தானத்தை மீட்கும் 'ஆபரேஷன் போலோ' என்னும் ரகசிய ராணுவ நடவடிக்கைத் திட்டம் உருவாக்கப்பட்டது.

ஹைதராபாத் எல்லை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சென்னை அரசாங்கத்தின் போலீஸாரிடம், "துணிச்சலாக ரஜாக்கர்களை திருப்பி தாக்குங்கள்!" என்று ஓமந்தூரார் கட்டளையிட்டார். ஆனால், "ரஜாக்கர்களிடம் நவீன ஆயுதங்கள் உள்ளன. எப்படி திருப்பித் தாக்குவது?" என்று அவர்கள் தங்கள் இயலாமையைத் தெரிவித்தனர். உடனடியாக சென்னையிலேயே துப்பாக்கி உள்ளிட்ட பாதுகாப்பு கருவிகளைத் தயார் செய்ய வேண்டும் என்று ஓமந்தூரார் முடிவெடுத்தார்.

பெரம்பூரில் ஒரு சாதாரண ரயில்வே தொழில் கூடம் இருந்தது. அங்கு பணியாற்றிய நடராஜன் நாட்டுத் துப்பாக்கிகள் செய்வதில் வல்லவர். அவரை அழைத்து ஆயுதங்கள் செய்வதற்காக ஆலோசனை நடத்தினார். 19450ல் கோவையில் இயங்கிவந்த டெக்ஸ்டூல் ஆலையை ஆயுத தொழிற்சாலையாக மாற்ற எண்ணி, அதன் உரிமையாளரான சுந்தரத்திடம் கலந்து பேசி இயந்திரத் துப்பாக்கி போன்ற நவீன ஆயுதங்களைத் தயாரித்தார்.

அதன்படி ஒரு பெரும் திட்டம் உருவானது. சென்னை, பம்பாய், மைசூர் ஆகிய மாகாணங்களில் இருந்தபடி ஒரே சமயத்தில் மும்முனை



ராணுவத் தாக்குதல் நடத்தி ஹைதராபாத் சமஸ்தானத்தை ரஜாக்கர்களின் பிடியிலிருந்து விடுவித்து இந்திய அரசுடன் சேர்ப்பது என்பதுதான் அந்தத் திட்டம். சர்தார் வல்லபாய் பட்டேலும் ஓமந்தூராரும் எடுத்த துணிச்சலான ஒரு அதிரடி திட்டம் அது. இந்த ராணுவ நடவடிக்கைக்கு 'ஆபரேஷன் போலோ' (Operation Polo) என்று பெயர் சூட்டப்பட்டது.

1948 செப்டம்பர் 13ல் இந்திய ராணுவப் படைகள் பம்பாய் மாகாணத்தின் சோலாப்பூரில் இருந்தும் சென்னை மாகாணத்தின் கர்னூலில் இருந்தும் விஜயவாடாவில் இருந்தும் ஹைதராபாத் சமஸ்தானத்துக்குள் ஆவேசமாக புகுந்து தாக்கத் தொடங்கின. செப்டம்பர் 17ல் ராணுவத் தாக்குதலைத் தாங்க முடியாமல் இந்தியப் படைகளிடம் ஹைதராபாத் நிஜாம் அடைந்தார். செப்டம்பர் 18ல் மேஜர் ஜெனரல் சவுத்ரி தலைமையில் இந்தியப் படைப்பிரிவு ஹைதராபாத் நகருக்குள் நுழைந்து சமஸ்தானத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. இந்திய சுதந்திர வரலாற்றில் இந்த சமஸ்தானங்களின் மீட்புப் போராட்டம் என்பது மிக முக்கியமான ஒன்று!

ஹைதராபாத் பிரச்சினையைத் தீர்த்ததில் ஓமந்தூரார் நெஞ்சுரமிக்க பங்களிப்பு மகத்தானது என்பது, சுதேச சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைப்பதில் வல்லபாய் பட்டேலின் வலதுகரமாக விளங்கிய அமைச்சரவைச் செயலாளர் வி.பி. மேனன் எழுதிய The Story of the Integration of the Indian States - (1956) என்ற நூலிலும் பிற்காலத்தில் ஆந்திர மாநில முதலமைச்சராக இருந்த கோபால ரெட்டியின் ஒரு கடிதத்திலும் விளக்கமாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. ''ஹைதராபாத்தை மீட்டெடுத்த தொடர்ச்சியான செயல்பாடுகளில் ஓமந்தூராரின் பங்களிப்பு முக்கியமானது'' என்று வல்லபாய் பட்டேல் குறிப்பிட்டிருக்கிறார்.

எனினும், இந்தியாவின் முக்கியமான வரலாற்று ஆசிரியரான ராமச்சந்திர குஹா போன்றோர் எழுதிய நூல்களிலும்கூட ஓமந்தூராரின் இத்தகைய சாதனைகள் விடுபட்டுள்ளன. இந்திய சுதந்திர வரலாறு தொடர்பான பல நூல்களில் ஓமந்தூராரின் பங்களிப்பு இருட்டடிப்பு செய்யப்பட்டிருப்பது ஒரு வரலாற்றுத் துயரம்!

ஓமந்தூராரின் பிறந்தநாள் (1895 பிப்ரவரி 1)

**நன்றி:** இந்து தமிழ் திசை நாளிதழ்


# HOTEL ANANDA

## VEG RESTAURANTS




SINCE 1989 AT CHENNAI

- ★ **TEYNAMPET**
- ★ **MADIPAKKAM**
- ★ **AMBATTUR**
- ★ **R A PURAM**

(Canteens at: ANNA UNIVERSITY
NIIT, CHENNAI

உ
வைரவசாமி துணை







# R.வையப்ப ரெட்டியார் ஏஜென்ஸி

## மரக்கரி வியாபாரம்

- R.V.சாந்தி லாரி சர்வீஸ்
- R.V.சாந்தி டிப்பர் சர்வீஸ்
- R.V.சாந்தி எர்த் மூவர்ஸ்
- R.V.சாந்தி ப்யூல்ஸ்

விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம்






R.V.வையனன்
95855 33165

R.V.செல்வக்குமார்
98421 44165

R.V.ராதாகிருஷ்ணன்
94431 34138

# Standard Associates

174, Kamaraj Salai, Saram, Pondicherry - 605 013.
E-mail : standardassociatespondy@gmail.com | Phone : 0413-2241134
Fax : 0413-2241297



Parryware
Guru BATH FITTINGS
Jaquar


ஆர்.எஸ்.ஆர்.ரெசிடென்சி
RSR RESIDENCY
RSR Residency
A Business Class Hotel @ Sivakasi
55 Well furnished room
AC & Non AC Rooms
Executive & Suite Rooms
24 Hour power supply
Complimentary breakfast
Centralised A/C
Balcony in all AC rooms
Kanira கனிரா
Multicusion Family Restaurant
உயர்தர சைவ & அசைவ உணவகம்
Exclusive OFFERS for Group Booking Party Orders
South Indian North Indian Chinese Tandoori Chats
Rudra ருத்ரா
Hi-Tech Conference Hall
Ideal for Business Meetings, Conferences and Family Functions
Equipped with Hitech Facilities and Ample seating capacity
Dhara தாரா
Premim Lounge Bar
419-A, Near Bus Stand, Sattur Road, SIVAKASI.
Ph: 04562 278299 278499, 278599, 275499
for Booking: +91 94427 37189 +91 94428 37189
www.rsrresidency.com
booking@rsrresidency.com


R.S.R
INTERNATIONAL SCHOOL
SENIOR SECONDARY
SIVAKASI
RSR INTERNATIONAL SCHOOL (CBSE)
SYMBOL OF SUCCESS
9677 807 125
9677 817 125
Website :-
www.rsrinternationalschool.com
www.rsrinternatinalschool.org
Email :-
rsr.int.cbseschool@gmail.com
ADMISSION FOR
CLASSES IX & XI
FOR ACADEMIC YEAR
AFFILIATED TO CBSE, NEW DELHI
AFFILIATION NO.: 1931442
ADMISSION GOING FOR
CLASSES PRE KG TO VIII
FOR ACADEMIC YEAR


New born
Best of everything
a Baby needs
63, mission st,
Pondicherry-1
ph : 0413-2346389
36, Sringeri madam st,
100 ft road,
Pondicherry-13
ph : 0413-2205659

# QUALITY ENTERPRISES

269, Kamaraj Salai, Puducherry - 605 013.

✆ : 2241928, 2241638, 9894645668/5

e mail : qualitypuducherry@gmail.com

**Distributor :**

Jain Pipes ™

Jain Drip ™

Jain Plumbing ™
Install peace of Mind!

Jain® Column Pipe
Your Lifeline to Prosperity.



KSB
Domestic Pump

QUALITY ARCADE
TILES & SANITARYWARE

No. 202, E.C.R. Road, Kokku Park Signal, Thattanchavady,
Puducherry - 8. E-mail: qualityarcade@gmail.com
Ph: 2244949, Mob. 98946 45660.

Kajaria
TRANSFORM YOUR WORLD

Kerovit

**MARUTHI SENIOR SECONDARY SCHOOL**
**LAWSPET, PUDUCHERRY – 605 008**
**A Unit of Maruthi Charitable and Educational Trust**
**Affiliated to CBSE (2930027)**

**Maruthi Charitable and Educational Trust** was established in the year 2000. Since then the trust was helping school children for preparing competitive examinations seeking admissions to various reputed national Institution, such as IIT, NIT, JIPMER, AIIMS, IISc, NISER, BITS etc., over this 22-years the trust has seen enormous number of students entering into such Institutions.

Since 2002 the Trust is running a school , at present it is under the name of Maruthi Senior Secondary School and affiliated to CBSE, with classes from LKG to XII Std.

The Trust also gives coaching for Students preparing for NEET and JEE.

Contact number : 0413 2199198 , 87549 22449


Email : maruthicbsc2020@gmail.com

Website: maruthischool2002.org


YOGI RAM INN
28,A.L.C. CAMPUS
Cuddalore.Ph (04142)220652,220653

# டேக்பான் நிகழ்வுகள்!

**புதுவை**



பகண்டை ரவிக்குமார் ரெட்டியார், கடலூர் தென்னிந்திய ரெட்டி ஜன சங்கத்தின் பொருளாளர் திருமதி சாந்தி ரவிக்குமார் இவர்களின் மகன் ஆர்.உதய பாஸ்கர் அவர்களின் திருமணம் கடந்த 27.2.2026 அன்று புதுவை பட்டனூர் சங்கமித்ரா கன்வென்ஷன் சென்டரில் இனிதே நடைபெற்றது. மறைந்த அருணாசல ரெட்டியாரின் மனைவி கௌரியம்மாள், மணமக்களுடன் ரவிக்குமார் ரெட்டியார், சாந்தி ரவிக்குமார் ரெட்டியார், மகள் ஆர்.கீர்த்தி, கே.ஜனனி, மகன் விஸ்வநாத் உள்ளனர்.

# நற்சிந்தனைகள்

- ஒரு நாள் ஒருமுறையாவது வாய்விட்டு சிரி
- குறைந்தது எட்டு டம்ளர் நீர் அருந்து
- விரும்பும் புத்தகம் படி
- செய்ய நினைத்ததை உடனே செய்
- பழைய நண்பர்களை சந்தி
- தினமும் ஒன்று புதிதாய் அறி
- நடை பயிற்சி செய்
- பழம், காய்கறி தினமும் உண்
- நண்பரிடம் பகிர்
- கவிதை இலக்கியம் படி
- பிறரை மகிழ்வி
- பிறரை மனதாரப் பாராட்டு, ஊக்குவி
- ஏதாகினும் மன்னித்து விடு
- பொறாமை, பேராசை, கோபம் விலக்கு
- அனைத்தையும் துணிவாக எதிர் கொள்
- எல்லாம் நன்மைக்கே என நினை
- குழந்தைகளிடம் அன்பை மட்டும் விதை
- மனம், உடல் ஆரோக்கியம் பேணு



# நீங்கள் சர்க்கரை நோயாளியா?

## சர்க்கரை நோய்க்கு ஒருங்கிணைந்த ஆங்கில மருத்துவ சிகிச்சை (Integrated) ஈஸ்ட் கோஸ்ட் சர்க்கரை நோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்



## ஸ்ரீ வித்யா குருப் மருத்துவமனைகள்
## பாண்டிச்சேரி சர்க்கரை நோய் மையம்

எண்.4, 4வது குறுக்கு, அண்ணா நகர், பாண்டிச்சேரி,
போன் : 0413-2204647 செல் : 9487562930

**எங்கள் சேவை (Our Services)**

1. கருவரையில் உருவாகி கடைசி வரை நீடிக்கும் சர்க்கரை நோய்க்கான முழுமையான பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் பிரிவு (Total Diabetics Checkup & Consulting) ஒவ்வொரு நோயாளிக்கும் நோயறிவு கல்வி பயிற்சி, உணவு முறை ஆலோசகர் (Diabetes Dieticians & Educators) சர்க்கரை நோய் கல்வியாளர்கள் கம்ப்யூட்டர் ஒலி, ஒளி அமைப்புகளின் உதவியோடு பயிற்சி அளிக்கப்படுகிறது.
2. பாதம் பாதுகாப்பு ஆலோசனை மற்றும் பரிசோதனை பிரிவு (Foot Care Centre)
3. இதயம், சிறுநீரகம், கண்கள் பரிசோதனைகள் மூன்று மாத சர்க்கரை அளவு (HBA1c) அறிய சிறப்பு பரிசோதனை.
4. நோயாளிகள் மற்றும் குடும்பத்தினர்கள் பயன்பெற சர்க்கரை நோய் மாதாந்திர இலவச பயிற்சி முகாம்கள் (பிரதிமாதம் தோறும் இரண்டாவது சனிக்கிழமை பாண்டிச்சேரி அருகில்)
5. சர்க்கரை நோய் குடும்பத்தினர் படிக்க, பயன்பெற பயிற்சி பெற Dr.G. சந்தானம் எழுதிய "சர்க்கரை நோய் உணவுமுறை சிகிச்சை" நூல்.
6. உடல் மனவள பயிற்சி பிரிவு யோகாசனம், சகஜயோக தியானம் செயல்முறை பயிற்சிகள்
7. சர்க்கரை நோய் சந்ததியினருக்கு நோய் வருமுன் காக்க, வந்தபின் நோயின் தீய விளைவுகளான ஹார்ட் அட்டாக், கை, கால் பக்கவாதம், சிறுநீரக பாதிப்பு, கால்கள் பாதிப்பு, கண் பாதிப்புகள் இவற்றில் இருந்து தப்பிக்க எங்கள் சேவைகளை பயன்படுத்தி நலம் பெறுவீர்.
8. சர்க்கரை நோய் பற்றி விளக்கம் அறிய டயாபடிஸ் டயல் சர்வீஸ் போன் : 04364 - 222930. செல் : 94431 62930
9. டயாபடிஸ் ஸ்டோர் - மருந்துகள், ஈவோசோல் காலணிகள், உணவுமுறை கண்காட்சி, பரிசோதனை கருவிகள்.



**SRI VIDYA HOSPITAL**

**East Coast Diabetic Treatment and Research Centre**

**சர்க்கரை நோய்க்கென்றே இயங்கி வரும் முழுநேரக் கிளைகள்**

**சென்னை கோயம்பேடு சர்க்கரை நோய் மையம்**
பார்வை நேரம் - முதல் வாரம்
ஞாயிற்றுக்கிழமை By Appointment
எண்.100, முதல் தெரு, அவ்வை திரு நகர்,
கோயம்பேடு, கோயம்பேடு மார்க்கெட்
பின்புறம், சென்னை - 92.
செல் : 9443162930/ 9790072202

**மயிலாடுதுறை சர்க்கரை நோய் மையம்**
14, கச்சேரி ரோடு,
மயிலாடுதுறை - 609 001.
தொலைபேசி - (04264) 222930
கைபேசி - 94431 62930

Towards Excellence & Diabetes Care to the Rural Mass

**Dr. S. கோபிநாத்,** M.D., (Neuro endo), DNB, MHSC (Diab)
**Dr. G. சந்தானம்,** M.B.B.S., DD., D.Diab (AVS), Phd(Diab)
**Dr. G. வரலெட்சுமி,** M.B.B.S., DGO, Fellow, Adv USG, CINF

# ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் கூட்டு பாராயணம்

13.10.2013 விஜயதசமி நன்னாளில் ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் கூட்டு பாராயணம் செய்யும் குழுவாக முதலில் அமைக்கப்பட்டது. பின்னர் முறையாக 03.03.2014 அன்று பதிவு செய்யப்பட்டது. அந்த விதிகளின் படி ஆன்மிகம் மற்றும் சமூக சேவை என இரு பிரிவுகளில் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் நிர்வாகத் தலைவர், பொருளாளர் மற்றும் 52 உறுப்பினர்கள கொண்ட குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

## ஆன்மிகப் பிரிவு

அறக்கட்டளை சார்ந்தவர்களால் ஸ்ரீ விஷ்ணு – ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் கூட்டு பாராயணம் இதுவரை 420 தடவைகளுக்கு மேல் கோரும் அன்பர்கள் இல்லம், அலுவலகம், வணிக இடங்களிலும், ஆலயங்களிலும் சேவிக்கப் பட்டுள்ளன.

திருப்பதி, திருமலை, புதுச்சேரி அருகேயுள்ள ஸ்ரீ பஞ்சமுக ஜெயமங்கள ஆஞ்சநேயர் ஆலயம், திருவந்திபுரம் மற்றும் திருமீயச்சூர் ஆலயங்களில் பக்தர்களை நெறிப்படுத்துதல், பிரசாத விநியோகம், அன்னதான கூடங்களில் உணவு பரிமாறுதல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

குறிப்பாக பஞ்சவடி ஆலயம், திருவந்திபுரம் ஆலயங்களில் நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்ச்சியில் 25–30 நபர்களால் சேவை செய்யப்பட்டது.



காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் ஆலயத்தில் 2019ல் நடைபெற்ற அத்திவரதர் வைபவத்தின் போது 15 நபர்கள் கொண்ட இரு குழுக்கள் 6 நாட்கள் அங்கு சென்று தங்கி சேவை செய்யப் பட்டது.

பிரதி வருடம் நவராத்திரி நாட்களில் வரும் முதல் ஞாயிறு அன்று கடலூர் மற்றும் சுற்றியுள்ள ஆலயங்களில் சென்னை ஸ்ரீஸ்ரீ மோகன் குருஜி அவர்கள் ஏற்பாடு செய்து நடத்தும் லட்ச தீபம் விழாவில் 25 – 30 நபர்கள் கலந்து கொண்டு கடந்த 6 ஆண்டுகளாக சேவை செய்யப்பட்டது.

கடந்த 12 வருடங்களாக ஆண்டு விழா ஏற்பாடு செய்து சிறந்த ஆன்மிக பெரியோர்கள், ஆச்சாரியர்கள் கொண்டு சொற்பொரிவு நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் விழா முடிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம், உணவு வழங்கப் படுகிறது. ■

**பெயர்: வெ.முத்துவரதன்**

**த.பெ: க.வெங்கடபதி**

**பூர்வீகம்: சொர்ணாவூர், மேல்பாதி கிராமம்**

**தற்கால குடியிருப்பு: எண். 44, ரட்சகர் நகர், செம்மண்டலம், கடலூர் – 607001**

**கைப்பேசி : 94420 67857, 90808 31150**

**பிறந்த தேதி: 20.07.1947**

**கல்வி:** B.Sc., **(ரசாயணம்)**

# ஆதரவற்றோர் நல்லடக்க சேவை

## கடலூர் ஹரித்ரா ஹரி சஹஸ்ரநாம அறக்கட்டளை

கடலூர் ஹரித்ரா ஹரி சஹஸ்ரநாம அறக்கட்டளை கடலூர் மாவட்ட நிர்வாகத்திடம் உரிய அனுமதி பெற்று அந்தந்த காவல் நிலைய காவலர் அதிகாரி முன்னிலையில் ஆதரவற்ற, அடையாளங் காண முடியாத சடலங்கள் கடலூர் நகராட்சி மஞ்சகுப்பம் இடுகட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது. இதுவரை 593 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து செய்து வரும் ஆதரவற்ற சடல நல்லடக்க சேவையில் 29.03.2026 ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கடலூர் புதுநகர் காவல் நிலைய (வழக்கு FIR No. 131/2026) சம்மந்தப்பட்ட சுமார் 55 வயது ஆண் சடலம் ஒன்று நம் அறக்கட்டளை மூலம் 594 வது சடலமாக நல்லடக்கம் செய்யப் பட்டது. 10.04.26 வெள்ளி கிழமை மாலை 5.30 மணிக்கு வடலூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வள்ளலார் தெய்வ நிலையம் சேர்ந்த (வழக்கு CSR No. 177/2026) சம்மந்தமான 76 வயது ஆண் சடலம் ஒன்று, மற்றும் திருப்பாப்புலியூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நத்தவெளி NULM முதியோர் இல்லம் சேர்ந்த வழக்கு CSR No. 374/2026 ) சம்மந்தமான 65 வயது பெண் சடலம் ஒன்று, மேலும் அதே திருப்பாப்புலியூர் காவல் நிலைய (வழக்கு FIR No. 121/2026) சம்மந்தமான 70 வயது ஆண் சடலம் ஒன்று என மொத்தமாக மூன்று ஆதரவற்ற சடலங்கள் முறையே 597, 598 – 599 வது சடலங்களாக நல்லடக்கம் செய்யப் பட்டன. மேற்படி மூன்று சடலங்களின் ஆத்மாக்களும் நற்கதி அடைய இறைவனிடம் பிராத்தனை செய்வோமாக. மேலும் ஒவ்வொரு ஆண்டும் மஹாளயபட்ச காலத்தில் தகுந்த புரோகிதரை கொண்டு இந்த அறக்கட்டளை மூலம் நல்லடக்கம் செய்யப்பட்ட காருண்ய பித்ருக்களுக்கு அனுக்ஞை தொண்டர்களாக இருந்து பொது சித்தாந்தம், தர்ப்பணம் செய்யப்படுகிறது.

ஹெல்த் லைன் இந்தியா நடத்தும் தாமரைக் குளம், கங்கணாங்குப்பம், முதியோர் இல்லம், கடலூர் நகராட்சி மற்றும் ஸ்கோப் இந்தியா இணைந்து நடத்தும் இரண்டு நகர்ப்புற வீடற்றோர் உறைவிட முதியோர் இல்லங்கள் மேற்குறிப்பிட்ட முதியோர் இல்லங்களுக்கு நிர்வாகிகள் கோரிக்கையை ஏற்று அவ்வப்போது உணவு வகைகள், துணிமணிகள், போர்வைகள், தார் பாய் மற்றும் மருந்துகள் வழங்கப்படுகிறது.

Global Trust for tje Differently Abled என்ற மனவளர்ச்சி குன்றிய சிறார் பள்ளி, திருப்பாப் புலியூர், கடலூர் சாந்தம், மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி, வடுகபாளையம், கடலூர், ஸ்ரீ சிவசக்தி தனி கவன சிறப்பு பள்ளி ஆகிய 3 பள்ளி குழந்தைகளுக்கு நிர்வாகத்தின் கோரிக்கையை ஏற்றுடையபர், விளையாட்டுப் பொருட்கள், உணவு, உணவுப் பொருள்கள், உடை, பிஸ்கட் போன்றவை வழங்கப்படுகிறது.

ஒருமுறை குளோபல் டிரஸ்ட் ஸ்ரீ சிவசக்தி பள்ளி என இரண்டு பள்ளிகளுக்கும் பிசியோ தெரபி மேஜைகள் வழங்கப்பட்டன. கோடையில் வரும் அக்னி நட்சத்திர காலம் முழுவதும் (சுமார் 28–30 நாட்கள்) கடந்த 5 ஆண்டுகளாக செம்மண்டலம் சாலை சந்திப்பு பகுதியில் தண்ணீர் பந்தல் அமைத்து பொதுமக்களுக்கு இலவசமாக நீர் மோர் மற்றும் குடிநீர் வழங்கப்படுகிறது. ■





# பக்தி இலக்கியம்

★ 'சிந்துக்கவி பேரரசு' அண்ணாமலை ரெட்டியார்



# காவடிச்சிந்து

தொடர் 06

## பாடலும் விளக்கமும்..

பாட்டு 9 வாவி வளம்

## 01

புள்ளிக்கலாபமயில் பாகன் – சக்தி
புதல்வனானகன யோகன் – மலை
போலத்தான் திரண்ட
கோலப்பன்னிரண்டு வாகன்
நல் விவேகன்

**பதவுரை:**

கலாபம் – தோகை, பாகன் – நடத்துபவன், கோலன் – அழகு மிக்கவன், வாகள் – தோள்களையுடையவன், வாகு – தோள்.

**பொழிப்புரை:**

கண் போன்ற வடிவ வண்ணப் புள்ளிகள் நிறைந்த தோகை மயிலை நடத்துபவன். சக்தி ரூபமான பார்வதி பாலன் என்ற பெருமைக்கு உரியவன். சிவயோக நெறிநின்று அதை நிலை நாட்டியவன். குன்றனையத் திரண்ட திண்ணியதும் பேரழகும் கொண்ட பன்னிரண்டு தோள்களை உடையவன். அவன் ஐயமறத் தெளிந்த பேரறிவாளன். அவன் வாலறிவன்.

**தெளிவுரை:**

**புள்ளிக்கலாப மயில் பாகன்:**

கண் போன்ற வடிவ வண்ணப்புள்ளிகள் செறிந்த தோகை மயிலை வாகனமாக நடத்துபவன். சீர்வளர் பசுந்தோகை மயிலான் என இரண்டாம் பாடலில் வந்துள்ளதையும் காண்க.

**நீளக்காள புயங்க கால நீலக் ரீவ**
**கலாபத்தேர்விடு நீபச் சேவக**

– திருப்புகழ்

**கராசலங்கள்**

**எட்டும் குலகிரி எட்டும் விட்டோட வெட்டாத வெளி**
**மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரத்தனே**

– கந்தரலங்காரம்

**கனயோகன்:**

சிவயோக நெறி நின்று அதை நிலைநாட்டியவன் முருகன்.

சக்தி என்பது வேல். வேல் என்பது ஞானம், சக்திதான் யாதோ என்னில் தடையில்லா ஞானமாகும்.

– சிவஞானசித்தியார்

**நல்விவேகன் – வாலறிவன்**

ஐயமறத் தெளிந்த பேரறிவாளன். ஆன்மாக்களின் அறிவு சிற்றறிவு. அது அறிவிக்க அறிவது. முருகன் பேரறிவு உடையவன். கதிரொளி துணை செய்யக் கண் பார்ப்பது போல இறையருள் துணை செய்ய ஆன்ம அறிவு பொருளை அறியும். ஆன்ம அறிவு தெளிவில்லாதது. அதனாலன்றோ திருவள்ளுவர் இறைவனை வாலறிவன் என்றனர்.

**கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்.**

– திருக்குறள்

## 02

வள்ளிக் கிசைந்த முருகேசன் – அண்ணா
மலைக் கவிராசன் மகிழ் நேசன் – என்றும்
வாழுங்கழுகுமலை வாவி வளம்
சொல்வேன் மாதே
கேள் இப் போதே.

**பொழிப்புரை:**

முருகேசன் வள்ளி நாயகிக்கு உகந்த

மணவாளன். அண்ணாமலைக் கவிராசனை மகிழ்விக்கும் அன்பன். எஞ்ஞான்றும் வளமாக வாழும் கழுகுமலைத் தலத்தின் வாவி வளம் நான் சொல்வேன். மாதே நீ இப்போது கேட்பாயாக.

**தெளிவுரை:**

**வள்ளிக்கிசைந்த முருகேசன்:**

வள்ளிநாயகிக்கு உகந்த மணவாளன் முருகன். வள்ளி என்பது ஜீவான்மா. முருகேசன் பரமான்மா. நாரதர் வள்ளியின் தபோசக்தி. முருகேசனை அழைத்து வந்தது தபோசக்தியான நாரதர். முருகேசன் வள்ளியை ஆட்கொண்டான் என்பது தத்துவம்.

## 03

**வெள்ளை நாரை கொத்தும் வேளை – தப்பி**
**மேற்கொண்டெழுந்தசினை வாளை – கதி**
**மீறிப்பாயும் தொறும் கீறிச்சாயும் தென்னம்**
**பாளை உடன் தாழை.**

**பதவுரை:**

சினைவாளை – கருவுற்ற வாளை என்ற ஒரு வகை மீன். கதி – சக்தி, வேகம், தாழை – தாழம் பூ மரம், தாழை மலருக்கு மணம் உண்டு.

**பொழிப்புரை:**

மீனுக்காகக் காத்திருந்த வெள்ளை நாரை ஒரு வாளை மீளைப் படீரெனக் கொத்தக் கொத்துப்படாது தப்பிய அந்தச் சூல் கொண்ட மீன் அதனது சக்திக்கு மீறி மேலே பாய்ந்த போது பக்கத்திலிருந்த தென்னை மரத்தில் மோதித் தென்னம் பாளை கீழேயுள்ள ஒரு தாழம் பூச்செடி மீது விழ அச்செடியும் சாய்ந்து விழுந்தது.

**தெளிவுரை:**

**கதி மீறிப்பாயுந்தொறும் கீறிச் சாயும் தென்னம் பாளை உடன் தாழை:**

வெள்ளை நாரை படீரெனக் கொத்த, கொத்துப் படாது தப்பிய சினை வாளை மீன் தனது சக்தியையும் மீறி மேலே பாய்ந்த போது பக்கத்திலிருந்த தென்னை மரப் பாளையின் மீது மோத அது கீறல்பட்டுக் கீழேயுள்ள தாழைச் செடியின் மீது விழத் தாழைச் செடியும் சாய்ந்து வீழ்ந்தது.

**கடியுண்ட நெடுவாளை கராவிற் தப்பிக்**
**கயத்துளடங்காமல் விசும்பிற் பாய**
**அடியுண்ட உயர்தெங்கின் பழத்தாற்பூகம்**
**அலையுண்டு குலை சிதறு மாலி நாடா.**

**– திருஞானசம்பந்தர்.**

**வெள்ளத் தடங்காச் சினை வாளை**
**வேலிக் கமுகின் மீதேறி**
**துள்ளி முகிலைக் கிழித்து மழைத்**
**துளியோடிறங்கும் சோனாடா.**

**– ஒட்டக்கூத்தர்.**

**சேற்றாவியிடைப் பகட்டுப் பகடுழக் கால்**
**வெகுண்டவரால் தென்னம் பொங்கர்**
**மேற்றாவி பழஞ்சிதறி முகில் புரைத்து**
**துளி ஒழுக்கி**

**– சீட்டுக்கவி – அண்ணாமலைக்கவிஞர்**

## 04

**தெள்ளும்பிள்ளை அன்னப் பேடும் – இளஞ்**
**சேவலானதுவும் ஊடும் – பின்பு**
**தேமலர்த்தவிசில் காமம்**
**முற்ற வந்து கூடும்**
**உற வாடும்**

**பதவுரை:**

வாடும் தெள்ளு – தெளிவான, அன்னப்பேடும் – பெண் அன்னம், இளஞ்சேவல் – இளமையான ஆண் அன்னம், ஊடுதல் – பிணங்குதல் தவிசு ஆசனம், இருக்கை.

**பொழிப்புரை:**

வாவியிலுள்ள வெள்ளை நிற இளம் பெண் அன்னப்பறவையை இளம் ஆண் அன்னம் இச்சையுடன் நெருங்கிய போது பெண் அன்னம் இணங்காது ஊடல் புரிந்து, ஊடலால் காம இச்சை மிகுந்து இரண்டும் தேன் துளும்பும் தாமரை ஆசனத்தின் மீது உறவாடி இன்புற்றன.

**தெளிவுரை:**

**அன்னப்பேடும் இளஞ்சேவலானதுவும் ஊடும்:**

கூடிக்கலந்து இன்பமுற்ற பெண் அன்னமும் இளஞ்சேவலான ஆண் அன்னமும் ஒன்றோடொன்று பிணங்கிப் பிரிந்தன. சிறிது பிணங்கிப் பிரிந்து பின்னர் இணங்கிக் கூடுவதால் காமுகர்க்கு இன்பம் அதிகரிக்கும்.

**ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்**
**கூடி முயங்கப் பெறின்**

**– திருக்குறள்.**

## 05

**மின்னிக்குலவு மதி மானும் வரி**
**வெள்ளைப் பணிலராசி தானும் – மட**
**மின்னார் விழிகளென**
**மின்னும் அரிய கெண்டை மீனும்**
**முத்தம் ஈனும்**

**பதவுரை:**

மின்னி – பிரகாசித்து, குலவு – அளவளாவுகின்ற, பிரகாசிக்கின்ற மதி – சந்திரன், மானும் – போல, உவமை உருபு, பணிலம் – சங்கு, உயிரினம், ராசி – கூட்டம், மடமின்னார் – இனம்பெண்கள், முத்தம் கொஞ்சுதல், முத்து, ஈனும் – இடும்.

**பொழிப்புரை:**

வானத்தில் வலம் வரும் பிரகாசமான சந்திரனைப் போல பிரகாசிக்கின்றதும் வரிகளையுடையதுமான உயிரினச் சங்குகளும் இளமங்கையரது கண்களைப் போன்று மின்னிப் பிரகாசிக்கின்ற கெண்டை மீன்களும் காம இச்சையால் மயங்கி ஒவ்வாக் காதல் கொண்டு ஒன்றை ஒன்று கொஞ்சி முத்தமிட்டுக் கொள்கின்றன.

பணிலராசிகளும் கெண்டைமீன்களும் ஈன்று கொட்டிய முத்துகளை அந்த வாவியில் எங்கும் காணலாம் என்று சாதாரணமாகப் பொருள் கொள்ளவும் கூடும்.

**தெளிவுரை:**

**மடமின்னார் விழிகளென மின்னும் அரிய கெண்டைமீனும்:**

இளமங்கையரது கண்களைப் போன்று பிரகாசிக்கின்ற கெண்டை மீன்கள் என்று கூறப்பட்டுள்ளது. கெண்டை மீன்கள் போன்றது இளமங்கையரின் கண்கள் என்பது இலக்கிய மரபு.

**கெண்டை யொண் கண் மடவா ளொருத்தி**
**– பெரியாழ்வார்**

**வரி வெள்ளைப் பணிலராசிதானும் அரிய கெண்டை மீனும் முத்தம் ஈனும்:**

பணிலராசி என்ற உயிரினச்சங்குகளும் அரிய கெண்டை மீனும் ஒவ்வாக்காதல் கொண்டு ஒன்றோடொன்று கொஞ்சி முத்தம் கொடுத்துக்கொள்கின்றன. குறிஞ்சி நிலப்பண்பு கூடல் கூறப்பட்டது.

பெருங்காப்பியப் புலவர்கள் ஒரு செய்தியை எத்துணை நயம்படக் கூறுவர் என்பதற்குக் கீழ்கண்ட பாடல் ஒரு சான்றாகும்.

**வண்டுவாழ் கொடுந்துறைக் கன்னிவாளை மேல்**
**நண்டு உகிர் உற்றென நடுங்கி நாணினால்**
**விண்டு ஒளிந்து ஊன் துறந்து ஒடுங்கும் வீழ்புனல்**
**கொண்ட பூங்கிடங்கு அணி நகரம் கூறுவாம்.**

இப்பாடலில் வரும் கன்னிவாளை மீன் அதன் மீது நண்டின் நகம்பட்டு விட்டதென்று நாணம் கொண்டு நடுங்கி உணவைத் துறந்து ஒடுங்கும் நகரம் என்று கேமமாபுரத்தில் வாழும் பெண்டிரின் கற்பினை எத்துணை நாகரீகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

## 06

**வன்னத்தாமரையைக் கண்டு வாயில்**
**மதுரராகம் பாடிக் கொண்டு – மதி**
**மயங்கியே பேட்டினுடன்**
**முயங்கியே கிடக்கும் வண்டு**
**கள்ளை யுண்டு**

**பதவுரை:**

யுண்டு வன்னம் அழகு, மதுரம் இனிமை, மதி – புத்தி, மயங்கி மயக்கத்தினால் தடுமாறி, முயங்கி – தழுவிக்கொண்டு, கள் – தேன்.

**பொழிப்புரை:**

செந்நிற அழகிய தாமரை மலர்களைக்கண்டு வண்டு ஆனந்தம் கொண்டு தேனை உண்டு வாயில் தெனத் தெனந்தான என்று இனிய கீதம் பாடிக்கொண்டேயிருந்து பின் தன்னை மறந்து பெண் வண்டைத் தழுவிக் கொண்டு மயக்கத்தில் கிடந்தது.

**தெளிவுரை:**

**வாயில் மதுரராகம் பாடிக் கொண்டு:**

வன்னத் தாமரையைக் கண்டவண்டு ஆனந்தம் கொண்டு வாயில் தெனத் தெனந்தான என்ற பண்ணில் மதுரமான கீதம் பாடிக் கொண்டேயிருந்தது. வண்டுகள் மலர்களில் நிறைந்த தேனை உண்ணும் பொருட்டு அரிய பண்களைப் பாடும். நல்ல பண்ணைக் கேட்டவுடன் மலர் விரிகின்றது. வண்டு பாடும் பண்ணிற்குப் பரிசிலாக மலர் தேன் தருகிறது.

**தினவரி வண் டார்த் தின்புற்**
**றிசை கொடு வந்தேத்தி இஞ்சித**

**திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமாளே**
**– திருப்புகழ்**

**அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்**
**குன்றமர்ந்து உரைதலும் உரியன்**
**– திருமுருகாற்றுபடை**

## 07

| | |
|---|---|
| **அந்தரத்துப் பெண்கள்** | **கூடி – செங்கை** |
| **யாலே நீந்திவிளை** | **யாடி – செல்லும்** |
| **அந்நல்லார் நடக்கும்** | |
| **நன்னடைக் குருகி** | **அன்னம்** |
| **செல்லும்** | **பின்னம்** |

**பதவுரை:**

அந்தரத்து – அம் + தரத்து, அழகிய தரமான, நன்நடை – நடை அழகு, உருகி – உருக்கம் கொண்டு, பின்னம் – பின் தொடர்ந்து.

**பொழிப்புரை:**

கழுகுமலை நகர்வாழ் அழகிய தரமான இளங்குமரிப் பெண்கள் ஒன்று கூடி அங்குள்ள தெப்பக் குளத்தில் தங்களது சிவந்த கைகளினால் நீந்தி விளையாடிப்பின் வீடுகளுக்குத் திரும்புகிறார்கள். அந்நல்லாரின் நன் நடையைத் தாமும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று உருக்கம் கொண்ட அன்னப்பறவைகள் அவர்களின் பின் நெருங்கிச் சென்றன.

**தெளிவுரை:**

**அந்தரத்துப் பெண்கள் நீந்தி விளையாடி:**

**அழகிய இளங்குமரிப்பெண்கள் அங்கேயுள்ள**
**தெப்பக்குளத்தில்**
**நீந்தி விளையாடிக் குளித்தனர்.**
**போதரிக்கண்ணியாய்**

**குள்ளக்குளிர குடைந்து நீராடாதே பள்ளி கிடத்தியோ**
**– திருப்பாவை – 13**

**நன்னடைக்கு உருகி அன்னம் செல்லும் பின்னம்:**

அக்குமரிப் பெண்களின் நன்னடை அழகைக் கண்ட அன்னப் பறவைகள் தாமும் அந்நடையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று மனத்தில் உருக்கம் கொண்டு அக்குமரிப் பெண்களைத் தொடர்ந்து நெருங்கி வந்தன.

பெண்களின் நடை அழகைக் கண்டு நாணி ஓடி ஒளிந்து கொள்ளும் அன்னப்பறவைகளையும் நாம் காண்கிறோம்.

**ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையள் ஆகும்**
**சீதை தன் நடையைக் கண்டு சிறு முறுவல் பூத்தான்.**
**– கம்பன்**

**பெடையோ டன்னம் பெய் வளையார் தம்பின் சென்று**
**நடையோ டியலி நாணி யொளிக்கும் நரையூரே**
**– பெரியாழ்வார் – திருமொழி**

## 08

| | |
|---|---|
| **மந்தமேதி உள்ளே** | **எட்டும் – சினை** |
| **வரிவராலெழுந்து** | **முட்டும் – போது** |
| **மடிசுரந்து கன்று தனை** | |
| **நினைந்து கண்ட** | **மட்டும்** |
| **பாலைக்** | **கொட்டும்** |

**பதவுரை:**

மந்தமேதி – மந்த இயல்பு கொண்ட எருமை

**பொழிப்புரை:**

மந்த இயல்புடைய எருமை வாவியினுள் ஆழமான பகுதிக்கு எட்டிச் செல்லும் போது அங்குச் சூல் கொண்ட வரிக்கோட்டுவரால் மீன் ஒன்று மாட்டின் மடியில் முட்டவும் அதைக் கன்றுதான் என நினைந்து மடி சுரந்து பாலைக் கணக்கின்றிச் சொரிந்தது.

**தெளிவுரை:**

**கன்றுதனை நினைந்து கண்ட மட்டும் பாலைக் கொட்டும்:**

வரால் மீன் மடிதனில் முட்டக் கன்று தான் முட்டுகிறது என எருமைமாடு நினைந்து கணக்கின்றிப் பாலைச் சொரிந்தது.

**கனைத் திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி**
**நினைத்து முலை வழியே நின்று பால் சோர**
**நனைத் தில்லம் சேறாக்கும் நற்செல்வன் நங்காய்**
**– திருப்பாவை 12**

**கன்றின் வாளை முட்ட**
**ஓதையர் ஆ அலைப்பால் சாய்க்கும் புன்னை மின்**
**– கோமதி அந்தாதி – அண்ணாமலைக்கவிஞர்**

**– தொடரும்**










புதுவை பிரதேச ரெட்டி நலச்சங்க துணைத் தலைவரும், கடலூர் தென்னிந்திய ரெட்டி ஜன சங்கத்தின் துணைத் தலைவரும், டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலச்சங்கத்தின் தலைவருமான திரு.எம்.வி.வைத்திலிங்க ரெட்டியார் – அனுசுயா தம்பதியரின் 50 ஆம் ஆண்டு திருமண நிறைவு விழா, சமூகப் பணியிலும், வழக்கறிஞர் தொழிலிலும் 50 ஆண்டுகள் நிறைவு விழா மற்றும் 75ஆம் ஆண்டு பவள விழா 24.1.2026 அன்று புதுவை பிரதேச ரெட்டி நலச்சங்கம் தலைமை அலுவலகம் அமைந்துள்ள வெங்கட சுப்பா ரெட்டியார் மஹாலில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் திரளானோர் கலந்து கொண்டு தம்பதியருக்கு வாழ்த்துகளை தெரிவித்ததோடு, தம்பதியினரிடம் வாழ்த்துகளையும் பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியில் புதுவையில் முன்னாள் முதல்வரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான திரு.வி.வைத்திலிங்க ரெட்டியார் எம்.பி. நிகழ்வில் கலந்து கொண்டு தம்பதியரை மனதார வாழ்த்தினார். மேலும் நிகழ்வில் கலந்து கொண்ட பெரும்பாலனவர்கள் திரு.எம்.வி.வைத்திலிங்க ரெட்டியார் மற்றும் அவர் துணைவியாரை புகழ்ந்து பாராட்டினார்கள். விருந்தோம்பலுடன் விழா இனிதே நிறைவேறியது.

# DHANALAKSHMI SRINIVASAN
## GROUP OF INSTITUTIONS

Perambalur / Trichy / Chennai / Coimbatore

Perambalur - 621 212, TamilNadu. Tel : 04328 220555,291255, 220554 / Email : dsgroups 1994@gmail.com

Medical / Engineering / Management Studies / Science & Humanity / Polytechnic / Nursing / Education / Teacher Training / Junior College



## WANT TO GO FURTHER ?

a degree course at Dhanalakshmi Srinivasan Group can take you far. We're ranked among the top ten in South India for Engineering, Science & Humanities

## DHANALAKSHMI SRINIVASAN
## Medical College & Hospital, Siruvachur, Perambalur



**Dhanalakshmi Srinivasan Engineering College,** (Perambalur)
**Srinivasan Engineering College,** (Perambalur)
**Dhanalakshmi Srinivasan College of Engg & Tech,** (Chennai)
**Dhanalakshmi Srinivasan College of Engineering,** (Coimbatore)
**Dhanalakshmi Srinivasan College of Engineering,** (Perambalur)
**Dhanalakshmi Srinivasan Institute of Technology,** ( Samayapuram,Trichy)
**Dhanalakshmi Srinivasan Institute of Research & Technology** (Perambalur)

Computer Science & Engineering
Electrical & Electronics Engneering

Aernautical Engineering
Civil Engineering
Electronics & Communication Engg
Mechanical Engineering

MBA/ MCA
Computer Science & Engg
Power Electronice & Drives
Applied Electronic
Embedded Syatems
Software Engineering

**27,000**
Students study in our Institutions

**11,500**
Students reside in 2250 rooms

**350 acres**
Campus Speed over aesthetically landscaped with lush green environement







**Dhanalakshmi Srinivasan College Of Arts & Science For Women,** (Perambalur)
**Srinivasan College Of Arts & Science :,** (Perambalur)

### UG COURSES

| | | |
|---|---|---|
| B.A. English | B.B.A. | B.Com. |
| B.Lit Tamil | B.C.A. | B.Sc. Maths |
| B.Sc.Physics | B.Sc. Biochemistry | B.Sc. Biochemistry |
| B.Sc. Chemistry | B.Sc. Comp. Science | B.Sc. Information Tech |
| B.Sc. Microbiology | B.Sc. Hotel Mgmt. & Catering Sci | |

### PG COURSES

| | | |
|---|---|---|
| M.A. Tamil | M.A. English | M.Com. MSW |
| M.B.A. | M.B.A. | M.Bc. Maths |
| M.Sc. Biochemistry | M.Sc. Microbiology | M.Sc. Chemistry |
| M.Sc. IT | M.Sc. Comp. Science | M.Sc. Bio-informatics |
| M.Sc. Physics | M.Sc. Biotechnology | M.Sc. Organic Chemistry |

**M.Phil Programmes :** Biotechnology / Chemistry / Commerce / Maths / Microbiology / Tamil

visit us for more information : www.dsgroups.org

Shri A. SRINIVASAN
Founder - Chaiman

# CAUVERY COLLEGE FOR WOMEN

Nationally Re-accredited with 'A' Grade (CGPA 3.37 Out of 4) by NAAC (2010 - 2015)

(RUN BY REDDY EDUCATIONAL TRUST, TRICHY)

Recognised as per G.O. No. 1298 Dt. 1.10.1984

Affiliated to Bharathidasan University ACA/1 100/04 Dt.12.84

UGU Recognized under section 2(f) 12 (B) Dt. 11.12.2003

Annanmalai Nagar, Tiruchirappalli - 620 018. Ph : 2751232 / 2751234

Fax : 0431 - 2751234 E-mail : cauverycollege_try@rediffmail.com

Website : cauverycollege.ac.in




**U.G**

B.A. (Tamil, English)
B.S.W.
B.Com.
B.Com. (Computer Applications)
B.B.A.
B.Sc. (Maths, Physics, Chemistry, Microbiology)
B.Sc. (Biotechnology, Computer Science)
B.C.A. (Bachelor of computer Application)
Bachelor of Information Technology
Bachelor of Nutrition and Diabetics

**P.G**

M.A. (Tamil, English)
M.Com
M.S.W.
M.Sc. (Mathematics, Physics)
M.Sc. (Chemistry, Microbiology)
M.Sc. (Food Service Management & Diabetics)
M.Sc. (Information Technology)
M.Sc. Computer Science
PGDCA

**RESEARCH**

M.Phil (Commerce, Social Work, Computer Science)
Ph.D. (Social Work, Tamil, Commerce, Mathematics, Computer Science)


ஸ்ரீ சீதாலக்ஷ்மி திருமண மண்டபம் A/C
எண்:305, பூவை நெடுஞ்சாலை, மதுரவாயல், சென்னை - 95.
C.V.N.R.Nala Sangam Family Function Welcome To All 10th Year
800 பேர் அமரும் வசதி ❋ 200 பேர் உணவு அருந்தும் வசதி உள்ளது
நவீன சமையல் கூடம் ❋ குடி தண்ணீர் வசதி உள்ளது ❋ 10 A/C ரூம்கள்
லிப்ட் வசதி உண்டு ❋ கார் பார்க்கிங் ❋ டூ வீலர் நிறுத்தும் வசதிகள் உள்ளது
அனைத்து சுபகாரியங்களுக்கும் சைவம் மட்டும்
மேலும் விவரங்களுக்கு:
94446 06618 / 94443 33922.


TAGORE MATRIC HR. SEC. SCHOOL • CHENNAI-129
LEARN AND SERVE
TAGORE MATRIC.HR.SEC.SCHOOL
(Recognised by Govt.of Tamilnadu)
Nanmangalam
PH : 044 - 2268 0369
KG.CHILD @ PLAY
OUTDOOR PLAY
J.NEMIDOSS
CORRESPONDENT
No.2/212, ELUMALAI SALAI,
NANMANGALAM, CHENNAI - 129.
Email ID : tagorematriculationschool@gmail.com
Website ID : www.tagorematric.com
PHYSICS LAB
COMPUTER LAB

# சத்தான சமையல்





★ திருமதி வேதவதி (எ) வேதவல்லி
புதுச்சேரி

## கோதுமை தேங்காய் ரொட்டி

**தேவையான பொருட்கள்:** பெரிய வெங்காயம் – 2, பச்சை மிளகாய் – 2, இஞ்சி – சிறு துண்டு பொடியாக நறுக்கியது, கறிவேப்பிலை, கொத்தமல்லி – சிறதளவு, கோதுமை மாவு – 2 கப், எண்ணெய், உப்பு – தேவையான அளவு, பிரெஷ்ஷாக துருவிய தேங்காய் – 1 மூடி.

**செய்முறை:** கடாயில் எண்ணெய் சிறிதளவு ஊற்றி வெங்காயம், இஞ்சி, ப.மிளகாய் நன்கு வதக்கவும். பின் கறிவேப்பிலை, கொத்தமல்லி சேர்க்கவும். சிறிது ஆறியவுடன் 2 கப் கோதுமை மாவு, உப்பு சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும். பின்னர் தேவைக்கேற்ப தண்ணீர் தெளித்து அடை தட்டுவதற்கு பதமாக மாவு பிசைந்து கொள்ளவும்.

தோசை கல் பதமாக சூடானவுடன் வாழை இலையில் மெல்லியதாக தட்டிய கோதுமை, தேங்காய் ரொட்டியை போட்டு இருபுறமும் சிவக்க எடுத்து பரிமாறவும். ருசியான தேங்காய் ரொட்டி ரெடி. சைடிஷ் இல்லாமலும் சாப்பிலாம். தேவையெனில் வெஜ் சப்ஜி, வெங்காய சட்னி சுவையை மேலும் அதிகரிக்கச் செய்யும். செய்து சாப்பிட்டு அசத்துங்கள்.

## பச்சைபயறு குழிப்பணியாரம்

**தேவையான பொருட்கள்:** பயறு – 1 கப், வெங்காயம் – 2, கேரட் – கால் கப், கோஸ் – கால் கப், பச்சை மிளகாய் – 3, பெருங்காயம் – சிறிதளவு, உப்பு – தேவைக்கேற்ப, எண்ணெய் – தேவைக்கேற்ப, கறிவேப்பிலை, கொத்தமல்லி – தேவைக்கேற்ப.

**செய்முறை:** பச்சை பயறு அல்லது பாசிப் பருப்பை மூன்று மணி நேரம் ஊறவைத்து கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும். எண்ணெய்யை தவிர மேற்கூறியுள்ள பொருட்களை மாவில் கலந்து கொள்ளவும். இட்லி மாவு பதம் சரியாக இருக்கும். கால் மணி நேரம் கழித்து குழிப்பணியார கல்லில் ஊற்றி 10 நிமிடம் வேக வைத்து, எடுத்தால் சுவையான குழிப்பணியாரம் ரெடி.

இதில் பனீர், டோஃப்பு காலிபிளவர் துருவி சேர்த்து செய்தால் குழந்தைகளும் விரும்பி சாப்பிடுவார்கள். செய்து அசத்துங்கள். ■


J Kay TVS
TVS
Authorised Main Dealers For
TVS Motor Company Limited
D/182, 100 Feet Road, Ozhandai, Opp to R.T.O Office, Puducherry - 605 004.
Tel : 0413-2280756 / 2280757.
வகை வகையான வண்டிகள்....
விதம் விதமான வண்ணங்கள் ....
வாங்கிட தூண்டும் சலுகைகள் ...
புதிய அறிமுகம்
TVS RAIDER
THE WICKED RIDE
INTRODUCING THE ALL-NEW
TVS JUPITER 125
Zyada se bhi zyada












HOTEL
RAM
INTERNATIONAL
★★

**HOTEL RAM INTERNATIONAL,**
398 ANNA SALAI, PUDUCHERRY – 605001
Ph: (0413) 2337230 – 35 & 4206600 – 03
Email: raminternationalhotel@gmail.com
www.hotelraminternational.com







Hotel
Abi Krishnaa
HOME AWAY FROM HOME

#1, 2, 3, 1st Cross, Pon Nagar Reddiarpalayam,
Pondicherry - 605010.
Cell: 93646 48400, 93646 48499 Ph: 0413 - 2206969
Email: info@abikrishna.com

## Facilities

- Luxuriously furnished suites room
- Running Hot & Cold Water
- Satellites TV channels
- Ample Car Parking
- All major Cards Accepted
- Banquets & Conferences Facilities
- Kamadhenu Veg Restaurant
- Laundry & Cleaners
- 24 Hours Front Desk
- CCTV Surveillance Camera

Abi Krishnaa
Tiles & Sanitary Mart

NO.182 Villiyanur Main road,
Jawahar Nagar, Reddiyarpalayam,
Pondicherry - 605010
CELL: 9443257722 / 7373100211 / 7373100288

**TILES, FITTING & SANITARY WARES, PLYWOOD, MICA SHEET, KITCHEN SINK**

OUR BRANDS

Kajaria · RAK · SOMANY · jaquar · KOHLER · ESSCO · Fine Plywood · MERINO LAMINATES · PRINCE Kitchen Sink

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 Years of Academic Excellence 2022 - 2023

TNEA COUNSELLING CODE 4962

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT UPDATES

For 2022 Batch: 95% Placement

For 2023 Batch: 500+ Offers, 275+ Internship Offers (as on 05th January 2023)

95% CONSISTENT PLACEMENT | 150+ COMPANIES | 625+ OFFERS | 15 LPA HIGHEST SALARY

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA



## NEC Special Features

- nirf Rank - 169
- ARIIA 2021 Band - Excellent
- DST - FIST Sponsored
- NAAC A
- K.R. Innovation Centre
- NBA Accredited
- NewGen IEDC, DST, New Delhi

## FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA Consultancy Services, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN, TESSOLVE, wipro, Data Patterns, Mistral, Brakes India Private Limited, Capgemini, Centizen, Elite, embedUR, vuram, Hexaware, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

COURSES OFFERED

D.C.E. - Diploma in Civil Engineering | D.E.E.E. - Diploma in Electrical and Electronics Engineering | D.M.E. - Diploma in Mechanical Engineering
D.E.C.E. - Diploma in Electronics and Communication Engineering | D.A.E. - Diploma in Automobile Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net

COURSES OFFERED

**UG** B.A. - English B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

**PG** M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com

வாழ்வியல் | ★ எம்.வி.வைத்திலிங்கம் ரெட்டியார்

03

# நெஞ்சில் நிறைந்தவர்கள்!



**புதுச்சேரி மாநிலத்தின் மூத்த வழக்கறிஞர். தென்னிந்திய ரெட்டியார் சமுதாயத்தை ஒருங்கிணைத்து உயர்வடையச் செய்யும் நோக்குடன் தொடங்கப்பட்ட ஆறு மாநில ரெட்டி நலச் சங்கத்தின் (டேக்பான்) தலைவர். தனி வாழ்விலும், பொது வாழ்விலும் அவருடைய நீண்ட அனுபவங்களை சுயசரிதைத் தொடராக பதிவு செய்கிறார்...**

## 25-5-2020 எங்கள் குடும்பம்

என் அப்பா வெங்கடசாமி ரெட்டியார் ஆஜானுபாகுவாக ஆறு அடி உயரத்தில் இருப்பார். வெளியில் செல்லும் போதெல்லாம் கதர் வேட்டியும்; முழு கை கதர் சட்டையும் மேல் துண்டையும் அணிந்து செல்வார். அனேகமாக கால்களில் செறுப்புகள் இருக்காது. அவர் மதியனூரில் பஞ்சாயத்து தலைவராகவும் உ.நெமிலி கிராமத்தில் கிராம முனிசிப்பாகவும் பணியாற்றினார்கள். ஏழாவது வகுப்பு வரை படித்ததாக எனக்கு சொல்லி ஞாபகம். அவருடைய ஆறு பிள்ளைகளில் நான் செல்ல பிள்ளை. மதியனூர் கிராமமும் உ. நெமிலி கிராமமும் இடையே 10 கி.மீ தூரம் இருக்கும். சமயத்தில் நடந்தே சென்று வருவார். தினமும் காலையில் எழுந்தவுடன் ஒரு முறை வயலுக்கு சென்று வருவார். பின்பு மாலை வேளையிலும் வயலுக்கு சென்று வருவார்.

அவர் வயலுக்கு செல்லுகின்ற போதும் வெளி ஊர்களுக்கு செல்கின்ற போதும் ஏரிக்கரையின் மேல் உள்ள ஐய்யனார் கோவிலுக்கு

சென்று சாமி குப்பிட்டு விட்டு அங்கிருந்த வேப்ப மரத்து இலைகளில் ஒன்றை பறித்து தன் பையில் வைத்து கொள்வது வழக்கம். படிப்பு அறிவு குறைவாக இருந்தாலும் எதையும் சாதிக்க கூடிய வல்லமை பெற்றவர். எங்கள் ஊர் தாசில்தார், கலெக்டர், ஆரம்ப சுகாதார மருத்துவர், காவல்நிலைய அதிகாரிகள் எல்லோரும் இவருக்கு நெருக்கமானவர்கள். அவர்களுடைய வீட்டு விஷேசங்களை என் அப்பா முன்னின்று நடத்தி கொடுப்பார்கள். அப்போதெல்லாம் ஆரம்ப பள்ளி ஆசிரியர்களை நியமிப்பதற்கும் இடமாற்றம் செய்வதற்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அதிகாரங்கள் உண்டு.

ஒரு முறை உளுந்தூர்பேட்டையில் படித்து கொண்டிருந்த என் அக்காவை பள்ளி ஆசிரியர் கையில் பிரம்பால் அடித்ததாக கேள்விபட்டு அவரை உளுந்தூர்பேட்டையிலுள்ள எங்கள் வாடகை வீட்டிற்கு அழைத்து பதிலுக்கு அவரை பிரம்பால் அடித்து விட்டார். அது மட்டுமல்லாமல் மேலதிகாரியிடம் சொல்லி அவரை பணியிடம் மாற்றி விட்டார். காரணம் பெண்களை ஆசிரியர்கள் அடிப்பதென்பது ஒரு அரிதான செயல். எங்கள் எல்லோரையும் அவர்கள் முன்னின்று பள்ளியில் சேர்த்து எங்களுக்கு தேர்வு நேரங்களில் உளுந்தூர்பேட்டையிலேயே தங்க வைத்து மூன்று வேளையும் எங்கள் ஊரில் இருந்து உணவுகளை கொடுத்து அனுப்புவார்கள். எங்கள் ஊர் அப்போது தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்ததால் மாவட்ட நீதிமன்றங்கள் கடலூரில் இருக்கும். அதனால் அங்கு சில வழக்கறிஞர்கள் அப்பாவிற்கு மிகவும் பழக்கமானவர்கள். தனக்கு வேண்டியவர்களுக்கு எந்த வழக்காக இருந்தாலும் எங்கள் அப்பா அழைத்து சென்று முடித்து வைப்பார்கள். எங்கள் ஊரில் எங்கள் அப்பாவை எல்லோரும் ஐய்யனார் சாமி என்று தான் அழைப்பார்கள்.

எங்கள் கிராமத்தில் என்ன சண்டை சச்சரவுகள் வந்தாலும் எங்கள் அப்பாவிடம் வந்து முறையிட்டு தீர்த்து கொள்வார்கள். காவல்நிலையமே சென்றது கிடையாது. அப்போதெல்லாம் கிராமத்தில் பெண்களுக்கு பிரசவம் பார்ப்பதற்கென்றே பெண் செவிலியர்களை வேலைக்கு அமர்த்தியிருப்பார்கள். அப்படி ஒரு செவிலியர் கடலூரியிலிருந்து வந்தார். சுந்தரி என்று பெயர் ஞாபகம். அவர் தந்தை ராஜராஜேஸ்வரி பஸ்சில் ஓட்டுநனராக பணியாற்றி கொண்டிருந்தார். அந்த சுந்தரியை எங்கள் ஊருக்கு அழைத்து வந்து மணமாகாதவர் என்பதினால் எங்கள் வீட்டிற்கு வெளிபுறத்திலேயே ஒரு அறையை கட்டி கொடுத்து அதிலே தங்க வைத்தார். சில சமயங்களில் இரவு வேளைகளில் பிரசவம் பார்க்க அந்த செவிலியரை அழைப்பார்கள். அப்போதெல்லாம் என் அப்பா பெட்டி வண்டி கட்டி கொடுத்து ஒரு ஆளை துணைக்கு அவர்களுடன் அனுப்பி வைப்பார்கள்.

அதே போல் அப்போது திருநாவலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்த டாக்டர்



**என்னுடைய திருமணத்தின் போது தாய், தந்தையருடன் எடுத்த படம்.**



**என்னுடைய மூத்த சகோதரர் ராதாகிருஷ்ண ரெட்டியார் குடும்பத்தினர்.**

முருகையன் என்பவர் வாரத்திற்கு ஒரு நாள் வியாழக்கிழமை அன்று எங்கள் ஊருக்கு வந்து மருத்துவம் பார்த்து மருந்துகள் கொடுப்பது வழக்கம். பின்னாளில் அவர் ஓய்வு பெற்று வளவனூரில் பெரிய மருத்துவமனை கட்டி சேவை புரிந்து வந்தார். அவருக்கு திருமணம் என் அப்பாவால் நடத்தி வைக்கப்பட்டது. அதே போல இரண்டாம் உலக போரின் போது எங்கள் ஊரில் அமைந்திருந்த விமான ஓடுதளத்தில் இன்ஞினியராக பணிபுரிந்த சீனுவாசன் என்பவருக்கும் என் தந்தை திருமணம் முடித்து வைத்தார். பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. அந்த சீனுவாசன் இறுதிகாலத்தில் சென்னை அக்ரோ விவசாய மையத்தில் தலைமை அதிகாரியாக பணிபுரிந்து வந்தார். என் அப்பாவிற்கும் அவருக்கும் இடையிலே அதிகமான தொடர்புகள் இல்லை. அந்த காலகட்டத்தில் ஒரு முறை நான் புதுவையில் இருந்து ஒரு இன்ஞினியர் நண்பருக்கு வேலை வேண்டி என் அப்பாவிடம் சொன்ன போது என் அப்பா உடனே எங்களை அழைத்து கொண்டு சென்னைக்கு சீனுவாசன் இல்லத்திற்கு சென்றார்.

இல்லத்தில் சீனுவாசனின் மனைவி எங்களை வரவேற்று உடனே கணவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவழைத்தார். அந்த பெரிய அதிகாரி உடனே வந்து தன் மனைவியுடன் என் அப்பாவின் காலில் விழுந்து கும்பிட்டார். அப்போது தான் என்னிடத்தில் அந்த இன்ஞினியர் என் அப்பா திருமணம் நடத்தி வைத்ததை குறிப்பிட்டார்கள். என் அப்பா வந்த வேலை சொன்னவுடன் அடுத்த வாரமே நான் அழைத்து சென்ற இன்ஞினியருக்கு வேலை போட்டு கொடுத்தார்கள்.

எங்கள் ஊரில் தீபாவளி பண்டிகையை விட பொங்கல் பண்டிகை தான் சிறப்பாக கொண்டாடுவார்கள். பொங்கல் பண்டிகையின் போது என் அப்பா கடலூருக்கு வந்து ஆட்களுக்கு கொடுப்பதற்காக நான்கு முழ வேட்டிகள், எட்டு முழ வேட்டிகள், ஆறு கஜம் புடவைகள், நூற்றுக் கணக்கிலே வாங்கி வருவார்கள். அவற்றையெல்லாம் பொங்கலை அடுத்த கரிநாள் அன்று எங்கள் ஊர் பணியாட்களுக்கும், உ.நெமிலி பணியாட்களுக்கும் வரவழைத்து அத்தனை பேர்களுக்கும் உணவளித்து வாங்கி வந்த ஆடைகளை கொடுப்பார்கள். பின்னாளில் என் அப்பா அத்தனை பணியாட்களுக்கும்; வருடத்திற்கு மூன்று முறை உணவு தானியங்களை கொடுத்து உதவுவார்கள். தீபாவளி வருகின்ற போது என் அப்பா எங்களுக்கு மட்டும் துணிகளை வாங்கி கொண்டு கடலூரில் எங்களுக்கு தேவையான அத்தனை பட்டாசுகளையும் வாங்கி வருவார்கள். அதனை எங்கள் வீட்டில் வைத்து எங்கள் ஆறு பேருக்கும் சமமாக பிரிக்கும் போது ஏழு பங்காக பிரிப்பார்கள். காரணம் செல்ல பிள்ளையான எனக்கு இரண்டு பங்கு. ஒரு முறை



**தாய் தந்தையருடன் எங்கள் சகோதரர்களின் குடும்பம்.**

நான் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்து கொண்டிருக்கும் போது செலவுக்கு பணம் அனுப்பவில்லை என்று தீபாவளி பண்டிகைக்கு நான் வர இயலாது என்று சொல்லி விட்டு விடுதிலேயே தங்கி விட்டேன். தீபாவளிக்கு முதல் நாள் இரவு ஏழு மணிக்கு என் அப்பா சென்னைக்கு வந்து விடுதி அறை கதவை தட்டினார்கள். திறந்ததும் என் அப்பா உடனே ஊருக்கு கிளம்பு என்று ஆணையிட்டார். நான் ஒன்றும் பேசாமல் அவருடன் அன்று இரவே எக்மோர் ரயில்வே ஸ்டேசனுக்கு வந்து ரயிலை பிடித்து தீபாவளி அன்று காலை ஆறு மணிக்கு உளுந்தூர்பேட்டை ரயில்வே நிலையம் வந்து இறங்கினேன். அங்கே எனக்காக பெட்டி வண்டி ஒன்று காத்திருந்தது. அதில் நானும் அப்பாவும் ஏறி கொண்டு வீட்டிற்கு வந்தேன். எனக்கு அங்கே ராஜ உபசாரம் நடந்தது. எண்ணெய் தேய்ப்பதற்கு ஒரு ஆள், குளிப்பாட்டுவதற்கு ஒரு ஆள் என்று என்னை தயார்படுத்தி எனக்கு புத்தாடைகள் கொடுத்து பலகாரங்கள் கொடுத்து என்னை உபசரித்தது இன்றளவும் என்னை நெகிழ வைத்தது. நான் புதுவையில் குடியேரியதும் இரண்டு முறை என் அப்பாவை அழைத்து வந்து ஜிப்மர் மருத்துவமனையிலும், புதுவை பொது மருத்துவமனையிலும் சிகிச்சை அளித்தேன். அவர் தன்னுடைய கடைசி காலத்தில் வீட்டிலேயே இருந்து 13–11–1994 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்கள். ஒரு தந்தை தன்னுடைய குடும்பத்திற்கும் தன்னை சார்ந்த ஊர் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் எப்படி வாழ்ந்து உதவிகள் செய்ய வேண்டும் என்பதற்கு அவர் ஒரு உதாரணம். இன்றளவும் அவர் எனக்கு ஒரு அவதார புருஷர். என் தந்தை இறந்தவுடன் என் தாய் அதிகமாக வெளியூர்களுக்கு வருவதில்லை. ஒரு முறை என் தாய் என்னை அழைத்து அவருடைய தாய் வீடான திருவாமூரில் இருந்து எப்படி பொங்கல் வரிசை வருமோ அதே போல என் தந்தை இறந்த பிறகும் என்னை எங்களுடைய மூன்று சகோதரிகளுக்கு தீபாவளி வரிசையை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதன்படி இன்றளவும் என்னால் முடிந்த அளவிற்கு என்னுடைய சகோதரிகளுக்கு பொங்கல் பண்டிகை சமயத்தில் செய்து வருகிறேன். என்னுடைய அம்மா மிகவும் பருமனாக இருப்பார்கள். சமயத்தில் நடப்பதற்கே சிரமப்படுவார்கள். என் திருமணம் முடிந்து

புதுவையில் குடியமர்த்துவதற்கு தேவையான அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். எங்கள் வீட்டில் இருந்த சமையல் பாத்திரங்களை இரண்டாக பிரித்து ஒன்று அண்ணனுக்கும் ஒன்று எனக்கும் கொடுத்தார்கள். அதே போல் என் தந்தையார் பயன்படுத்திய கட்டில்கள் மேஜை நாற்காலி உட்காருவதற்கு நீண்ட பென் முதல் கொண்டு புதுவைக்கு அனுப்பி வைத்தார்கள். பொதுவாக அதிகம் பேசமாட்டார்கள். என்னுடைய இளைய சகோதரியின் பேரில் அதிக பற்றும் பாசமும் கொண்டிருப்பார்கள். என் அம்மாவையும் இரண்டு முறை புதுவைக்கு அழைத்து வந்து மருத்துவம் பார்த்து அனுப்பி வைத்ததுண்டு. அவருடைய கடைசி காலங்களில் அவர்களால் நடக்க முடியாமல் படுக்கையிலே இருந்தார்கள். என்னுடைய நடு அண்ணி தான் ஒரு தாயை போல செவிலியரை போல கடைசி வரை என் தந்தையையும் தாயையும் இறுதி காலத்தில் பார்த்து கொண்டவர்கள். என் தாயார் கடைசியாக 14–2–2003 அன்று இயற்கை எய்தினார்கள். எங்கள் ஊரே திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியதை நினைத்து பார்க்கின்றேன். அடுத்த சகாப்தம் முடிந்தது.

எங்கள் பெரிய அண்ணன் முத்துராம் என்கிற ராதாகிருஷ்ணனுக்கும் 29–10–1946 இல் பிறந்த செம்மணங்கூர் கோவிந்தசாமி ரெட்டியார் மகள் பத்மலோசினிக்கும் 12–5–1961 இல் திருமணன் நடந்தது. இதை நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அவர்களுக்கு முதலில் ராஜேஸ்வரி என்ற பெண் குழந்தை பிறந்து 11 வயதில் சக்கரை நோயால் இறந்துவிட்டது. இரண்டாவதாக மகன் ரவி என்ற அப்பர்சாமி 24–7–1967 இல் பிறந்தார். அவருக்கும் அதே செம்மணங்கூரை சார்ந்த சந்தானம் என்பவருடைய மகள் 22–8–1969 இல் பிறந்த சௌமியை திருமணம் முடித்து வைத்தார்கள். திருமணம் முடித்த அவர்களுக்கு 21–11–1992 இல் ஸ்மிரிதி என்ற பெண்ணும், 23–3–2002 இல் ஹாரிஷ் என்ற மகனும் பிறந்தார்கள். ரவி என்கிற அப்பர்சாமி குடும்பத்துடன் திருச்சி ஸ்ரீரங்கத்தில் குடியிருந்து வருகிறார்.

அப்பர்சாமிக்கு அடுத்து 3–1–1969 இல் ராணி என்ற பெண்ணும் 6–5–1971 இல் சித்ரா என்ற பெண்ணும் எங்கள் அண்ணிக்கு பிறந்தார்கள். இரண்டு பெண்களும் தங்களுடைய பட்ட படிப்பை திருச்சியில் படித்தவர்கள். ராணிக்கும் 30–4–1966 இல் சென்னை ஸ்ரீபெரும்புத்தூர் அருகில் உள்ள குண்டுபெருமத்தூரை பூர்வீகமாக கொண்டு சென்னை அண்ணா நகரில் வாழ்ந்து வரும் கல்லூரி பேராசிரியர் எழில்மாறன் என்கின்ற சம்பத் என்பவருக்கும் 17–1–1991 தன்னுடைய அண்ணனின் திருமண நாளிலேயே கடலூரில் திருமணம் நடந்தது. சென்னை அண்ணா நகரில் வசித்து வருகிறார். அவர்களுக்கு 22–7–1996 அன்று ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு இலக்கியா என்று பெயரிட்டு மகிழ்ந்தார்கள். அந்த இலக்கியா தற்போது பல் டாக்டர் பட்டம் பெற்று மேற்படிப்பிற்கு ஆயத்தம் ஆகி வருகிறாள்.

அதேபோல சித்ராவிற்கும் 22–5–1968 இல் உளுந்தூர்பேட்டையை அடுத்து ஆலடி கிராமத்தை பூர்வீகமாக கொண்டு தற்போது உளுந்தூர் பேட்டையில் தொழில் செய்து வரும் ராமசுப்ரமணியனுக்கும் 26–11–1993 இல் புதுவையில் திருமணம் நடந்தது. அவர்களுக்கு 30–3–1995 அன்று ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு சுவாதிகா என்று பெயரிட்டு மகிழ்ந்தார்கள். சுவாதிகா தற்போது பட்டபடிப்பு முடித்து புதுவையில் குமாரகிருஷ்ணன் என்பவரை கடந்த வருடம் திருமணம் செய்து கொண்டு புதுவையில் வாழ்ந்து வருகிறாள்.

எங்கள் பெரிய அண்ணன் எஸ்எஸ்எல்சி வரை படித்தவர். இளம் வயதிலேயே திருமணம் முடித்து உ.நெமிலி கிராமத்தில் குடியேறினார். அங்கு கிராம முனிசிப்பாகவும், பஞ்சாயத்து தலைவராகவும் கடைசியில் பஞ்சாயத்து கவுன்சிலராக தேர்வு செய்யப்பட்டவர். அதே போல் எங்கள் அண்ணி பத்மலோசினி அம்மாள் ஊர் பஞ்சாயத்து தலைவியாக நிற்க வைத்து வெற்றி பெற செய்தார். என் மீது என் அண்ணனுக்கு அளவற்ற பாசம். நானும் நடு அண்ணன் சுப்ரமணியனும் கடலூர் பள்ளி விடுதியில் தங்கி படிப்பு முடிந்து விடுமுறையில் ஊருக்கு வரும் போது எங்களை அழைப்பதற்கு காரை எடுத்துக்கொண்டு பள்ளி விடுவதற்கு முன்பே வந்து விடுவார். நாங்கள் வந்ததும் எங்கள் இருவரையும் அழைத்து கொண்டு சிற்றுண்டி வாங்கி கொடுத்து ஆறு மணிக்கு தொடங்கும் சினிமாவிற்கு கடலூரில் அழைத்து செல்வார்.

படம் முடிந்ததும் மீண்டும் ஓட்டலில் சாப்பாடு. இரண்டாவது சினிமா 9–.30 மணிக்கும் அழைத்து போவார்கள். படம் முடிந்ததும் கடலூர் பஸ்



நிலையம் எதிரில் இரவில் நடைபாதையில் ஒரு சேட்டு சிற்றுண்டி கடை வைத்திருப்பார். அங்கு அழைத்து சென்று மீண்டும் எங்களுக்கு வேண்டிய இட்லி, தோசை, சப்பாத்தி முதலியவை வாங்கி கொடுத்து அன்று இரவே எங்களை மதியனூருக்கு அழைத்து வந்து நடு அண்ணனை இறக்கி விட்டு விட்டு என்னை மட்டும் தன்னுடைய காரிலேயே உ.நெமிலி கிராமத்திற்கு அழைத்து சென்று விடுவார். பள்ளி கல்லூரி விடுமுறை நாட்களில் பெரும்பாலும் அவருடன் தான் இருப்பேன். அப்போதெல்லாம் எங்கு காங்கிரஸ் கூட்டம் மாநாடு நடந்தாலும் என்னை அழைத்து செல்ல தவறுவதில்லை. பெரும்பாலும் அவர் வீட்டில் தங்க மாட்டார். காரணம் கிராமத்தில் நடக்கும் அத்தனை குடும்ப சண்டைகளையும் தீர்த்து வைக்க இவரிடத்தில் தான் வருவார்கள். இவருக்கு ஓய்வே இருக்காது. குடும்பத்தையும் விவசாயத்தை யும் அண்ணி பார்த்து கொண்டார்கள். குழந்தைகளின் படிப்பை அவருடைய மாமனார் செம்மணங்கூர் கோவிந்தசாமி ரெட்டியார் பார்த்து கொண்டார்.

பெரிய அண்ணன் இரவு படுப்பதற்கு மட்டும் கிராமத்திற்கு செல்வார். காலையில் எழுந்தவுடன் குளித்து முடித்து விட்டு உளுந்தூர்பேட்டைக்கு வந்து விடுவார். நிறைய நண்பர்கள். நாள் முழுவதும் அரசியல் பேசுவார்கள். பல சமயங்களில் நானும் உடனிருந்ததுண்டு. அப்போதெல்லாம் ஒரு நாளைக்கு 10 டீ 20 சிகரெட்டாவது பிடிப்பார். பின்னாளில் சிகரெட் குடிப்பதை அறவே நிறுத்தி கொண்டார். நான் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பிஏ பட்டபடிப்பு படிப்பதற்கு இருவேல்பட்டு கம்பத்தம் சுப்ரமணிய ரெட்டியார் எம்எல்ஏ மூலம் கல்லூரியில் சேர்த்து விட்டார்.

அதே போல சட்ட படிப்புக்கு புதுவையில் புதிதாக ஆரம்பித்த சட்ட கல்லூரியில் சேர்த்து அவரின் மாமனாரின் நண்பரான வெள்ளாழ வீதியில் அப்போது குடியிருந்த லூர்துசாமி முதலியாருக்கு சொந்தமான ரங்கபிள்ளை வீதியில் உள்ள எல்லோரா லாட்ஜில் மாத வாடகைக்கு ரூம் எடுத்து கொடுத்து உதவினார்கள். அவருடைய உதவியினால் தான் இரண்டு பட்ட படிப்பும் என்னால் முடிக்க முடிந்தது. பின்னாளில் நான் அவரது தம்பியாக இருந்தாலும் குடும்ப நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் என்னிடம் பகிர்ந்து கொண்டு தான் செய்வார்கள். விருந்தினர்கள் யார் வீட்டிற்கும் போக மாட்டார். அப்படியே போனாலும் தங்க மாட்டார். புதுவைக்கு வரும்போது என் வீட்டில் மட்டும் தங்குவார்.

அதே போல் பெரிய மகள் சென்னை ராணி வீட்டில் தங்குவார். அடிக்கடி அம்பாசிடர் காரை



மாற்றி கொண்டே இருப்பார். பழைய காரை தான் வாங்குவார். அந்த இன்ஜினில் எல்லா வேலைப்பாடுகளையும் அவருக்கு நன்கு தெரியம். அவருக்கு நான் ஒரு புதிய காரை வாங்கி கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது கடைசி வரையில் நிறைவேறவில்லை. ஆனால் என்னுடைய அந்த ஆசை என்னுடைய நடு அண்ணனுக்கு புது காரை வாங்கி கொடுத்து நிறைவேற்றி கொண்டேன்.

பெரிய அண்ணனுடைய கடைசி காலத்தில் அவருடைய இன்ப துன்பங்களில் பங்கேற்றேன். கவுன்சிலர் தேர்தலில் நான் சென்று ஒரு வாரம் அவருடன் தங்கி இருந்தேன். உ.நெமிலி கிராமத்தில் உள்ள அத்தனை கோவில்களையும் அவர் தான் பராமரித்து வந்தார். கோவில் நகைகள் எல்லாம் அண்ணியுடைய பாதுகாப்பில் தான் இருக்கும். விஷேச நாட்களில் எடுத்து சென்று திரும்ப கொண்டு வந்து கொடு;த்து விடுவார்கள். 2007 ஆம் ஆண்டு மே மாதம் நான் என் மனைவி மகனுடன் கேரளா குமரகம் ஊருக்கு சுற்றுலா சென்றிருந்தேன். போகும் போது எங்களை உளுந்தூர்பேட்டையில் சந்தித்து வழிநெடுக சாப்பிடுவதற்கு பழங்களும் பலகாரங்களும் கொடுத்து அனுப்பினார்கள். ஆனால் விதி அதே மாதத்தில் அவரது ஊரில் நடந்த தீமிதி திருவிழாவை மேற்பார்வை பார்த்து கொண்டிருக்கும் போது ஒரு குடிகாரன் இவரை தீயில் தள்ளிவிட்டான். அதனால் முழு உடம்பும் தீப்புண் ஏற்பட்டு சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் 28–5–2007 அன்று காலமாகி விட்டார்கள். இறுதி சடங்கு வியக்கத்தக்க அளவில் நடந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள், மந்திரிகள், பஞ்சாயத்து சேர்மன்கள், பஞ்சாயத்து தலைவர்கள், கிராம முனிசிப்புகள், பஞ்சாயத்து கவுன்சிலர்கள், உ.நெமிலி, களவனூர், செல்லூர், பாண்டூர், உளுந்தூர்பேட்டை, பச்சைவெளி, இலுப்பையூர், மதியனூர் போன்ற கிராம மக்கள் அத்தனை பேரும் இறுதி சடங்கில் கலந்து கொண்டார்கள். என்னை வளர்த்த அண்ணன் எங்களிடத்தில் இல்லை. மாளாத்துயரத்தில் நாங்கள் இன்றளவும் மீளவில்லை.

அவரை போல அண்ணி பத்மலோசினி அம்மாள் எனக்கு மற்றொரு தாய் போன்றவர். பழகுவதற்கு இனிமையானவர். அண்ணன் மறைவிற்கு பிறகு கிராமத்திலேயே தனியாக தங்கி விவசாயத்தை பார்த்து கொண்டு கடைசி காலம் வரை வாழ்ந்தார்கள். அவர்களும் என்னிடத்தில் முக்கிய பொறுப்புகளை கொடுத்து பார்க்க சொல்வார்கள். அதை அவரது எண்ணம் போல நான் நிறைவு செய்து கொடுத்திருக்கிறேன். அவர்களும் தீரா நோய்வாய்ப்பட்டு 23–12–2017 அன்று காலமாகி விட்டார்கள். உ.நெமிலி மாளிகையை இருள் சூழ்ந்து கொண்டது.

பெரிய அண்ணனுடைய 60வது வயது நிறைவு விழா திருக்கடையூரில் விமரிசையாக நடந்தது. அவர்களுடைய நினைவு என்னை விட்டு அகலவில்லை. மறையவும் மறையாது. அவர்களின் நினைவாக அவர்களின் குழந்தைகளை இன்றளவும் நேசிக்கின்றேன். என்னை சித்தப்பா என்று அழைக்கும் போதெல்லாம் நெகிழ்ந்து போகிறேன்.

என் அண்ணார் அண்ணியை போலவே அவருடைய மகன் அப்பர்சாமி மகள்கள் ராணி, சித்ரா அவர்களுடைய குடும்பம் இன்றளவும் எங்களுடைய தொடர்பில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். என்னை அவர்கள் குடும்ப தலைவனாக ஏற்று கொண்டு பல நேரங்களில் பல யோசனைகளை என்னிடத்திலே பெற்றிருக்கி றார்கள். பாசமும் தொடர்கிறது. பந்தமும் தொடர்கிறது.

**– வருவார்கள்**




## வாழ்த்து பூமாலை

தந்தைக்கும் தாய்க்கும்
தலைசிறந்த மகனாக
சகோதர சகோதரிகளுக்கு
இணையற்ற சகோதரனாக


ஆருயிர் மனைவிக்கு
ஆத்மார்த்த கணவனாக
ஒரு பிள்ளைக்கு
உற்ற தந்தையாக
பேரக்குழந்தைகளுக்கு
பாசக்கார தாத்தாவாக

நீதியின் நெடும்பயணத்தில்
ஆற்றல்மிகு வழக்கறிஞராக
சமுதாயப் பணிகளில்
ஓடி ஓடி உழைக்கும்
ஓய்வறியா சூரியனாக

75ஆம் அகவையில்
25வயது இளைஞனாக
நேசத்தின் நெடுஞ்சாலையில்
பாசத்துடன் பயணிக்கும்
அன்பினிய அண்ணன்
வைத்திலிங்கம் அவர்களுக்கு
எங்கள் பேரன்பின்
வாழ்த்து பூமாலையை
சூட்டி மகிழ்கிறோம்!
வாழிய நலம்!
சூழிய வளம்!

என்றும் உங்கள்
அன்பின் ஆசிகளுடன்

**– நேசமிகு ராஜகுமாரன்**
**பரிமளா ராஜகுமாரன்**
**நேசிகா ராம்அருண்**
**ராம் அருண்ராஜ்**
**மற்றும் நண்பர்கள் உறவினர்கள்**



# நற்சிந்தனை துளிகள்

- எல்லோரும் எல்லாம் தெரிந்து கொண்டு பிறப்பதில்லை. நமது அறிவைப் பயன்படுத்தி, நாம்தான் ஏன் (why), எதற்கு (which), எப்படி (How to) என்ற கேள்விகளால் பகுத்தறிந்து சிந்தித்துச் செயல்பட்டு வெற்றிகளைக் குவிக்க வேண்டும்.
- வெற்றிக்கும் தோல்விக்கும் வித்தியாசம் அதிகம் இல்லை. கடமையை செய்தால் வெற்றி! கடமைக்கு செய்தால் தோல்வி!
- நம்மால் முடியாது என்று நினைக்கும் செயல்களை, யாரோ ஒருவர் எங்கோ ஓர் இடத்தில் அதை செய்து கொண்டுதான் இருக்கிறார்.
- ஒவ்வொரு மனிதனும் இந்த உலகத்தையே மாற்ற வேண்டும் என்னு நினைக்கிறார்கள். ஆனால் ஒருவர் கூட தங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமென நினைப்பது இல்லை!

**– லியோ டால்ஸ்டாய்**

- மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்!
- எது உன்னை அச்சம் கொள்ளச் செய்கிறதோ அதை அஞ்சாமல் எதிர்த்து நில்

**– சுவாமி விவேகானந்தர்**

- வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்குஞ் தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு

**– வைரமுத்து**

- நாடென்ன செய்தது நமக்கு என கேள்விகள் கேட்பது எதற்கு நீயென்ன செய்தாய் அதற்கு என நினைத்தால் நன்மை உனக்கு.
- நாம் வேறு நபர் அல்லது வேறு சில நேரம் காத்திருந்தால் மாற்றம் வராது. நாம் தான் நம்முடைய மாற்றத்திற்கு காத்திருக்கிறோம். நாம் தான் நாம் தேடிக் கொண்டிருக்கும் மாற்றம்.

**– பராக் ஒபாமா**

## கண்ணீர் அஞ்சலி



**வி**ழுப்புரம் நகரின் மூத்த வழக்கறிஞர், விழுப்புரம் மாவட்ட ரெட்டி (கஞ்சம் ) நலச்சங்க நிறுவனரும், EMS கல்வி அறக்கட்டளை நிறுவன அறங்காவலரும், OPR நினைவு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவன அறங்காவலருமான திரு.டி.இராதா கிருஷ்ண ரெட்டியார், 27.12.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் விழுப்புரத்தில் நடைபெற்றது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் பதிவு செய்கிறோம். அன்னாரின் ஆன்மா மோட்சத்தை அடைய இறைவனை வேண்டுவோம்.

## கண்ணீர் அஞ்சலி



**நெ**ல்லை ஸ்ரீ சக்தி ஹாஸ்பிடல் நிர்வாக இயக்குனர்கள் ஆன டாக்டர் திருமதி வி.சுமதி ரெட்டியின் தகப்பனாரும், டாக்டர் திரு.எஸ். வெங்கடேஷ் பாபு ரெட்டியின் மாமனாருமான டாக்டர் செல்லப்பா ரெட்டியார், முன்னாள் இணை இயக்குனர், சுகாதாரத் துறை, தூத்துக்குடி மாவட்டம், 14.03.2026 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதி ஊர்வலம் 16.03.2026 அன்று கோவில்பட்டியில் நடைபெற்றது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா மோட்சத்தை அடைய இறைவனை வேண்டுவதோடு அன்னாரை இழந்து வாடும் உற்றார் உறவினர்களுக்கு டேக்பான் ஆறு மாநில ரெட்டி நல சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறோம்.

# டேக்பான் நிர்வாக குழு பட்டியல்

**காப்பாளர்:** திருச்சி கே.நாராயணன் ரெட்டி

**தலைவர்:** புதுச்சேரி ம.வெ.வைத்திலிங்கம் ரெட்டி

**சங்க ஆலோசகர்கள்:** கொல்லம் சங்கர் ரெட்டி, சென்னை நரசிம்மன் ரெட்டி, புதுச்சேரி வெ.ராமச்சந்திரன் ரெட்டி, ஒசூர் ஒய்.வெங்கடசாமி ரெட்டி, கடலூர் ல.ஜெயச்சந்திரன் ரெட்டி, மதுரை ஆர்.பட்டாபிராமன் ரெட்டி, கோயம்புத்தூர் டாக்டர் ஜனார்த்தன் ரெட்டி

**சங்க செயல் தலைவர்கள்:** விளாத்திகுளம் ஆர்.செல்வகுமார் ரெட்டி, துறையூர் கே.ஆர்.ரவி ரெட்டி

**சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்:** ஜெக.நேமிதாஸ்

**இணை ஒருங்கிணைப்பாளர்:** நாகேந்திரன் ரெட்டி

**கேரள மாநில துணைத் தலைவர்:** ஆர்.சுரேஷ் ரெட்டி

**ஆந்திர மாநில ஒருங்கிணைப்பாளர்:** திருப்பதி வெங்கம்பள்ளி தாமோதர ரெட்டி

**தமிழ்நாடு தெற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்:** மதுரை சீனிவாசன் ரெட்டி

**துணைத்தலைவர்கள்:** ஆர்.பட்டாபி ரெட்டி, திருவண்ணாமலை வீரமணி ரெட்டி, டி.வி.ராஜ் வெங்கட் ரெட்டி, எர்ணாவூர் ரவீந்திரநாத் ரெட்டி, புதுச்சேரி எம்.சிவசங்கரன் ரெட்டி எம்.எல்.ஏ., திருவண்ணாமலை எஸ்.கோவிந்தசாமி ரெட்டி, சென்னிகுளம் எல்.ராமசுப்பிரமணியம் ரெட்டி, சிவகாசி ஆர்.சண்முகம் அய்யா ரெட்டி

**தெலுங்கானா மாநில துணைத் தலைவர்:** ரவி ரெட்டி

**கர்நாடக மாநில துணைத்தலைவர்:** கிரீஷ் ரெட்டி

**பொதுச் செயலாளர்:** திண்டிவனம் ஜி.கிருபாகரன் ரெட்டி

**நிர்வாக பொதுச் செயலாளர்:** புதுச்சேரி ஜெ.சந்திரசேகரன் ரெட்டி

**பொருளாளர்:** புதுச்சேரி எஸ்.தர்மசிவம் ரெட்டி

**இணைச் செயலாளர்கள்:** புதுச்சேரி ஆர்.பிரபாகரன் ரெட்டி, கும்பகோணம் எஸ்.ரமேஷ் ரெட்டி, கோயம்புத்தூர் பி.கிருஷ்ணமூர்த்தி ரெட்டி, கேரளா ஆர்.ஜனார்த்தன் ரெட்டி, சென்னை ஜி.ஆர். ரவிச்சந்திரன் ரெட்டி, திண்டிவனம் ஆர்.பாபு ரெட்டி, திருவண்ணாமலை வெங்கடாசலபதி ரெட்டி, சென்னை வி.ரவிச்சந்திரன் ரெட்டி

**எஸ்.டி.பி.சி. ஓ.பி.சி. பிரிவு தலைவர்:** திருவண்ணாமலை எஸ்.டி.தனக்கோட்டி ரெட்டி

**வழக்கறிஞர் பிரிவுத் தலைவர்:** சென்னை ஜி.ஆர்.ரவிச்சந்திரன் ரெட்டி

**மகளிர் பிரிவு தலைவி:** மதுரை எஸ்.தேவசேனா ரெட்டி

**மகளிர் பிரிவு செயலாளர்:** டாக்டர் ஆர்.அனிதா சாந்தகுமார் ரெட்டி

**இளைஞர் பிரிவு தலைவர்:** டாக்டர் டி.எஸ்.அமர்பிரசாத் ரெட்டி

**இளைஞர் பிரிவு செயலாளர்:** திண்டிவனம் எஸ்.சீனிவாசன் ரெட்டி

**நிர்வாகக் குழு உறுப்பினர்கள்:** மதுரை எம்.சிவசங்கரன் ரெட்டி, மதுரை டி.சதீஷ்குமார் ரெட்டி, சாத்தூர் என்.சந்திரபால் ரெட்டி, தூத்துக்குடி பி.கணேசன் ரெட்டி, கடலூர் ரவிச்சந்திரன் ரெட்டி, கேரள வேணுகோபால் ரெட்டி, சென்னை முத்துகிருஷ்ணன் ரெட்டி, கேரளா, கொல்லம் எஸ்.ராமராஜ் ரெட்டி, வேலூர் கே.விமல்ராஜ் ரெட்டி, திருவனந்தபுரம் ஆர்.கிருஷ்ணசுவாமி ரெட்டி, செங்கல்பட்டு ஆத்தூர் சி,பாலகிருஷ்ண ரெட்டி, கோட்டயம் ஆர்.விசுவநாதன் ரெட்டி, திருச்சி வீ.ராஜேந்திரன் ரெட்டி, புதுச்சேரி பி.நரசிம்மன் ரெட்டி, பட்டுக்கோட்டை ராம்குமார் ரெட்டி, புதுச்சேரி வெ.ஜெயப்பிரகாஷ் ரெட்டி, சேலம் ஜி.காந்திராமன் ரெட்டி, புதுச்சேரி பி.வாசு ரெட்டி, கரூர் சுப்புராமன் ரெட்டி, காரைக்கால் ஞானசேகரன் ரெட்டி, மதுரை கே.குருநாதன் ரெட்டி, திண்டிவனம் பாலப்பட்டு சீனிவாச ரெட்டி.

# அன்பான வேண்டுகோள்!

அன்பு சொந்தங்களே! வணக்கம். நலம் நாட நாட்டம். நமக்கு நாம். நாடு நமது.

ரெட்டி இனத்திற்கு தாங்கள் ஆற்றிவரும் தொண்டினை நன்றியோடு எண்ணி மகிழ்கிறேன்! 'ரெட்டி பண்பாடு' – காலாண்டு இதழ் பெரியவர்களின் ஆலோசனைகளின்படி 'டேக்பான்' ஆறு மாநில ரெட்டி நல சங்கத்தின் மூலம் தொடர்ந்து புதுப் பொலிவுடன் தங்கள் கரத்தில் தவழ்கிறது. தொடர்ந்து உங்கள் ஆதரவையும், ஆலோசனைகளையும் நல்கிட விழைகின்றேன்.

தங்கள் பகுதியில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒளிப்படத்துடன் அனுப்பி வைத்தால் 'ரெட்டி பண்பாடு' இதழில் வெளியிட ஏதுவாக இருக்கும்!

நமது 'ரெட்டி பண்பாடு' இதழ் நமது இனத்தவர்களின் சாதனைகள், சரித்திரங்கள், ஆலயங்களின் ஆன்மீக செய்திகள், மருத்துவர்களின் ஆலோசனைகள், தொழில் அதிபர்களின் ஆலோசனைகள், இல்லத்தரசிகளின் இனிய சமையல் குறிப்புகள், கல்வி, விவசாயம், தொழில் – வேலைவாய்ப்பு செய்திகள், திருமண தகவல் செய்திகள், ரெட்டி சங்கங்களின் தொண்டு செய்திகள், இன்னும் பல செய்திகளுடன் 'ரெட்டி பண்பாடு' தொடர்ந்து வெளிவர உள்ளது. தங்களின் ஆதரவை நல்கிட மீண்டும் வேண்டுகிறேன். நன்றி!

## சந்தா விபரம்

புரவலர் சந்தா ரூபாய் – 15 ஆயிரம்.
ஆயுள் சந்தா ரூபாய் – 5 ஆயிரம்.




## விளம்பரக் கட்டணங்கள்!

வருடத்திற்கு (4 இதழ்களுக்கு)

| | |
|---|---|
| முழு பக்கம் பல வண்ணம் | – ரூபாய் 8,000 |
| அரைப்பக்கம் பல வண்ணம் | – ரூபாய் 4,000 |
| முழு பக்கம் கருப்பு – வெள்ளை | – ரூபாய் 4,000 |
| அரைப்பக்கம் கருப்பு – வெள்ளை | – ரூபாய் 2,000 |
| அட்டை 2 வது பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 10,000 |
| அட்டை 3 வது பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 10,000 |
| கடைசி அட்டை 4ம் பக்கம் (பலவண்ணம்) | – ரூபாய் 12,000 |

## சந்தா அனுப்ப வேண்டிய விபரம்.

**இந்தியன் வங்கி, ரெட்டியார் பாளையம் கிளை, பாண்டிச்சேரி, டேக்பான் ரெட்டி நல சங்கம், S.B.A/C.No. 6932384915, I.F.S.Code.No.IDIB000R076.**

**ம.வெ.வைத்திலிங்கம்,** வழக்குறைஞர்,
தலைவர் டேக்பான் ஆறு மாநில ரெட்டி நலசங்கம். தொடர்புக்கு: 98431 33287.

**ஜி.கிருபாகரன்,** வழக்குறைஞர்,
பொதுச்செயலாளர், டேக்பான் ரெட்டி நலச்சங்கம். தொடர்புக்கு: 94433 55481.

**அலுவலக முகவரி:**

24, மெயின் ரோடு, சித்தன்குடி, பாண்டிச்சேரி – 605013.

e-mail: vaithyad@yahoo.com Website: reddysindia.com

# HOTEL SURGURU
Hotel & Restaurants





Centrally located - walkable distance to Beach and Major attractions.

- 57 Centralised AC Rooms.
- Multi-cuisine Pure Vegetarian Restaurant
- 5 Banquet Halls with separate Dining facility (Capacity 30 to 400 Pax.)
- Ample parking space





There is a Surguru wherever you are in Pondicherry

SURGURU Restaurant
Mission Street, +91-413-4308083

SURGURU Restaurant
100ft Road, +91-413-4308088

SURGURU SPOT
Nehru Street, +91-413-4308084

SURGURU Restaurant
S V Patel Road, +91-413-4200201

HOTEL SURGURU
No.104, S. V. Patel Salai, Pondicherry – 605001. Phone: 0413-4200201
Email: booking@hotelsurguru.com Website: hotelsurguru.com




Hotel Jayaram

**MR. V.RAMACHANDRAN** B.A., B.L.,
Managing Director

90, Kamaraj Salai,
Pudhuchery - 605 011
Ph: (0413) 336877, 227191 to 98

- **No Taxes**
- **Checkout Time 24 Hours**
- **Tariff Includes T.V. and Other Facilites**





## Facilites

- Luxuriously furnished Rooms and Suites
- STD and FAX Facilites
- CCTV with 25 TV Channels in all Rooms
- Runnung Hot & Cold Water
- Credit Cards Accepted
- Doctor on Call
- Travel Agent, Rent a Car
- Laundry & Cleaners
- Spacious Car Parking
- Cuisine, Vegetarian South Indian, North Indian
- Banquet & Conference Facilites

E-mail: hoteljayaram@gmail.com Web: www.hoteljayaram.com